
உ

பண்டரிபுரம்-ஷிரிடியாத்திரை

ஸ்தலங்களும் ஸ்தல புராணமும்



தொகுப்பு

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமிதி
அன்பர்கள்

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

உறவுகள் மேம்பட ....

வேதாத்திரி மகரிஷி அவர்களின் அருளுரை

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி, மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும், இதோ சில எளிய வழிகள் :

- தானே பெரியவன், தானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.
- அர்த்தமில்லாமலும், தேவையில்லாமலும், பின் விளைவு அறியாமலும் பேசிக் கொண்டேயிருப்பதை விடுங்கள் (Loose Talks)
- எந்த விஷயத்தையும் பிரச்சனையும் நாசூக்காகக் கையாளுங்கள். (Diplomacy)
- விட்டுக்கொடுங்கள் (Compromise)
- சில நேரங்களில் சில சில சங்கடங்களை சகித்துதான் ஆகவேண்டும் என்று உணருங்கள். (Tolerance)
- நீங்கள் சொன்னதே சரி செய்ததே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள். (Adamant Argument)
- குறுகிய மனப்பான்மையை விட்டொழியுங்கள். (Narrow Mindedness)
- உண்மை எது. பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள். (Carrying Tales)
- மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள். (Superiority Complex)

பண்டரிபுரம், ஷிரிடி யாத்திரை

எப்பொழுதும் ஓய்ச்சல் ஒழிச்சல் இல்லாமல் வேலை, படிப்பு என்று இருப்பதே வாழ்க்கை ஆகிவிடாது. ஊக்கமும் உற்சாகமும் வாழ்க்கையில் கொடுப்பதான வாய்ப்பு சுற்றுலா ஆகும். நம் பண்டைய கலாச்சாரத்தில் மக்கள் இறைவனைத் தேடி சுலபமான வழியை, பக்தியை கண்டுபிடித்து இறைவன் புகழைப் பாடுவதன் மூலமாக மனத்தை சந்தோஷமாக வைத்திருந்தனர். அப்படிப்பட்ட பக்தர்கள், சாதுக்கள் மஹாராஷ்ட்ர மாநிலத்தில் அனேகர் இருந்தனர். அவர்கள் வாழ்ந்த ஊர்கள், பக்தர்கள் வாழ்ந்த இடம், வணங்கிய இறை உருவம், ஆகிய பல விஷயங்களைப் பற்றி தெரிந்து கொள்ள மராத்திய மாநிலத்தை நேரில் காண ஒரு சந்தர்ப்பம் தேடினோம்.

இந்த மஹாராஷ்ட்ர மாநில சுற்றுலாவின் திருத்தலங்களை திருச்சி ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சமிதி அங்கத்தினர்கள் 15பேர் கொண்ட குழு மேலும் தேர்ந்தெடுத்து கலந்து கொண்ட ஐந்து அன்பர்களும் ஆன்மீக நோக்கு சிறிது காட்டி உடன் வர ஒத்துக் கொண்டனர். நான்கைந்து ஆண்டுகளாக போட்ட இந்த பண்டரிபுர யாத்திரை திட்டம் இந்த ஆண்டுதான் கைகூடியது.

தரிசித்த ஜ்யோதிர்லிங்கமுள்ள தலங்கள்

1. ஸ்ரீ மஹாபலேஷ்வர்,
2. ஸ்ரீ த்ரையம்பகேஸ்வர்
3. ஸ்ரீ பர்லி வைத்தியநாத்,
4. ஸ்ரீ க்ரிஷ்ணேஸ்வர்
5. ஸ்ரீ பீமாசங்கரர், ஆவன

அஷ்ட விநாயர்களில்

1. லென்யாத்ரியில், ஸ்ரீ கிரிஜாத்மஜ,
2. பாலியில், ஸ்ரீ பல்லாலேஸ்வரர்
3. தேவூரில், ஸ்ரீ சிந்தாமணிகணபதி
4. ஓஜ்ஜாரில், ஸ்ரீ விக்னேஸ்வரர்
5. மஹத்தில், ஹ வரதவினாயகர், ஆவர்

இத்திருத்தல / யாத்திரையில் பங்குபெற்றவர்கள் கீழ்கண்ட ஐந்து ஆண்களும், பதினைந்து பெண்களுமாக மொத்தம் இருபதுபேர்.

1. திரு. A.M.M. பார்த்தசாரதி, தில்லைநகர், திருச்சி
2. திருமதி. P. சந்திரா, தில்லைநகர், திருச்சி
3. திருமதி. V. மனோன்மணி, தில்லைநகர், திருச்சி
4. திருமதி. R. காந்தி, தில்லைநகர், திருச்சி
5. திருமதி. S. சுப்புலக்ஷ்மி, தில்லைநகர், திருச்சி
6. திருமதி. S. சுலோசனா, திருநகர், திருச்சி
7. திருமதி. V. பாமா, திருநகர், திருச்சி

8. திருமதி. R. ஜெயலக்ஷ்மி, திருநகர், திருச்சி
9. திரு. R. பாலகிருஷ்ணன், கே.கே.நகர், திருச்சி
10. திருமதி. P. ராஜேஸ்வரி, கீழஅம்பிகாபுரம், திருச்சி
11. திருமதி. T. சுமதி, கீழஅம்பிகாபுரம், திருச்சி
12. திருமதி. S. அனுசூயா, கண்டோன்மெண்ட், திருச்சி
13. திருமதி. J. சரஸ்வதி, கல்கண்டோர்கோட்டை, திருச்சி
14. திரு. B. பலராமன், சேலம்
15. திருமதி. B. மைதிலி, சேலம்
16. திரு. M. ராமச்சந்திரன், கோயமுத்தூர்
17. திருமதி. R. அனுசூயா, கோயமுத்தூர்
18. திரு. K. சந்தானகிருஷ்ணன், தஞ்சாவூர்
19. திருமதி. S. சரளா, தஞ்சாவூர்
20. திருமதி. D. தனலக்ஷ்மி, தியாகராயநகர், திருச்சி.

2001 செப்டம்பர் 2ம் தேதி ஞாயிறு பகல் 12.50க்கு திருச்சியில் புறப்படும் நாகர்கோயில் திருப்பதி எக்ஸ்பிரஸில் பண்டரிபுரத்திற்கு பயணம் தொடங்கினோம். இரவு சாப்பாட்டிற்கும், காலை சிற்றுண்டிக்கும் அவரவர் வீட்டில் இருந்து தயாரித்துக் கொண்டு சென்றோம். அன்று பௌர்ணமியாக இருந்ததால் மாலை 5 மணிக்கு ரயிலிலேயே எல்லோரும் ஒரு இடத்தில் கூடி ஸ்ரீராமகிருஷ்ணரை வைத்து லலிதா சஹஸ்ரநாமம், பஜனைப்பாடல்கள், ஆரத்தி எல்லாம் பாடி வழிபட்டோம். எல்லோரும் அவரவர் இடத்திற்குச் சென்று 8 மணிக்கு சாப்பிட்டுவிட்டு தூங்கினோம்.

3.9.2001 யன்று காலை 6மணியளவில் எல்லோரும் ஒன்றுகூடி குருஸ்துதி சொல்லி, பஜனைபாடி குருதேவர் அர்ச்சனை செய்தோம். பின்னர் அவரவர் சிற்றுண்டியை சாப்பிட்டோம். நின்ற ஸ்டேஷனில் எட்டிப்பார்த்த குரங்குக்கும் ஜன்னல் பக்கமாக வாழைப்பழம் கொடுத்தோம். எங்களில் சிலர் பேசிக்கொண்டு வர, சிலர் பாட்டு எழுதிக் கொண்டும், மற்றும் சிலர் படுத்துக்கொண்டும் பொழுதைக் கழித்தனர். ரயில் 12.30க்கு ஷோலாப்பூரை அடையவே எல்லோரும் இறங்கினோம். எங்களை காண ஷோலாபூர் சின்மயா மிஷன் காரியதரிசி திரு. தேஷ்முக், அவருடைய நண்பருடன் கூட வந்திருந்து 'பூக்கொத்து' அளித்து வரவேற்றார். எங்கள் லக்கேஜ்களை கூலி ஆட்கள் வைத்து ட்ராலியின் மூலமாக வெளியே கொண்டு வந்து வேனில் எற்றி, அவர் நடத்தும் பிரம்ம சமாஜ அனாதைகுழந்தைகள் விடுதிக்கு அழைத்துச் சென்றார். நாங்கள் மராத்தி தெரியாத காரணத்தால் எங்கள் கருத்துக்களை அவர்களுடன் சிறப்பாக பறிமாறிக்கொள்ள முடியவில்லை. ஆங்கிலம், ஹிந்தி தெரிந்தவர்களுடன் சில விஷயங்களைப் பேசி புரிந்துகொண்டோம். குளித்து பின் எங்களுக்காக தயாரித்திருந்த விருந்து சாப்பாட்டை திருப்தியாக சாப்பிட்டோம்.

நாங்கள் போட்ட பயணதிட்டத்தில் சிறிது மாறுதல் செய்து திருதேஷ்முக் எங்கள் திரும்பும் பயணத்தை புனேக்கு பதிலாக

ஷோலாப்பூரிலிருந்தே துவங்கச்சொன்னார். அதனால் ரயில் நிலையம் சென்று பயணச்சீட்டு முன்பதிவை மாற்றிக்கொண்டு வரும் வரை காத்திருந்து பிறகு காப்பி அருந்திவிட்டு மாலை 4.30 அளவில் சதீஷ்ட்ராவல்ஸ் வேனில் அகல்கோட்டிற்கு புறப்பட்டோம். நாங்கள் போகும் பயணம் எதுவாக இருந்தாலும், அது சுபமாக முடிய ஒரு ஸ்லோகத்தை மூன்றுமுறை சொல்ல வேண்டி திருதேஷ்முக் கற்றுக்கொடுத்தார். அது பின்வருமாறு:

"ஸமீ சமயதே பாபம், சமீ லோஹித கண்டகா
தரித் யர்ஜுன பாணானாம், ராமஸ்ய ப்ரியவாதினீ
கரிஷ்யமான யாத்ராயாம், யதாகாலம் ஸுகம்மயா
தத்ர நிர்விக்னம் கர்த்ரீத்வம், பவ ஹராம பூஜிதே"

42 கி.மீ. தூரமுள்ள அகல்கோட்டை 5.30 மணிக்கு அடைந்தோம். இங்கே ஸ்ரீ தத்தாத்ரேயர் தன்னுடைய நான்காவது அவதாரத்தில் ஸ்ரீ சமர்த்த ராமதாஸ் ஸ்வாமியாக தோன்றினராம். சமர்த்த மஹாராஜ் சமாதி பார்த்தோம். அங்கு சமர்த்தரின் படங்களே பல கோணங்களில் இருந்தன. வடவிருக்ஷ ஸ்வாமி சமர்த்த ராமதாஸரை பார்க்க வந்தவர், அவர் இல்லாததால் ஆல மரத்தடியில் தியானத்திலிருந்து சமாதியும் அடைந்தார். சில மராட்டிய பெண்கள் பஜனைபாடி முடிந்ததும் நாங்களும் பாடினோம். இரு நாட்டினரின் ரசனைகளை பரிமாறிக் கொண்டோம். பிறகு 7.30 மணிக்கு ஷோலாப்பூர் திரும்பினோம். சாமான்கள், சமையல் காரர்களோடு 8 மணிக்கு புறப்பட்டு 74 கி.மீ தூரத்திலுள்ள பண்டரி புரத்தை இரவு 11 மணிக்குப் போய் அடைந்தோம். அங்கு ஸ்ரீ கஜானன மஹராஜ் மடத்தில் தங்கினோம். சாப்பாட்டிற்கு பூரியும், ஸ்ரீகண்டும் தயாரித்து கொடுக்க, உண்டு உறங்கினோம்.

தாய் தந்தையரை புறக்கணித்து விலைமகளிர்க்கு அடிமையாகி வீழ்ந்து கிடந்த புண்டரீகனர்க்கு ஒரு இரவு நடந்த நிகழ்ச்சி விழிப்பைப் பெறச் செய்தது. அதன் பின் பெற்றோரை அணுகி காலில் விழுந்து மன்னிப்பு பெற்று, அவர்கள் சேவையே பெரிதென எண்ணி பேணிக்கொண்டிருந்தான். தாயையும் தந்தையையும் தெய்வங்கள் என்ற உணர்வோடு கவனித்தால் கடவுள் நமக்கு அருள் செய்வார் என்பதை அறிந்தான். அதன்படி வாழ்க்கை நடத்தினான். ஸ்ரீமந் நாராயணன் புண்டரீகன் வீட்டுப்பக்கமாக வரவே, அவன் அருகே இருந்த செங்கல்லை எடுத்துப்போட்டு, பெற்றோர் சேவையில் ஈடுபட்டிருந்த சமயம் இறைவனுக்கும் இடைமறிக்க உரிமையில்லை என்றும், தன் தாய் தந்தையருக்கு தீர்த்தம் எடுத்துக் கொடுத்துவரும் வரை இதில் சற்று நேரம் நின்றிரும் என்று சொன்னான். பக்தன் வீடு தேடிவந்த பெருமான் அங்கு தங்கிவிட்டான். மராத்தியில் விட் என்றால் செங்கல், உபா என்றால் நிற்பவர்; செங்கல் மீது நின்ற செம்மல் விட்டோபா ஆகிவிட்டார். புண்டரீகர் வாழ்ந்த பூமி புண்டலீகபுரமாகி, நாளடைவில் மருவி புண்டரீபுரம், பண்டரிபுரம் ஆயிற்று. அதே மாதிரி தன் தாய் தந்தையரை குளிப்பாட்ட இறைவன் அருளால் எதிரிலேயே பீமாநதி சந்திரப்பிறை

வடிவில் சென்றதனால் சந்திரபாகா என்ற பெயரைப் பெற்றது. இது ஒரு முக்கிய யாத்திரை ஸ்தலமான பண்டரீபுர வரலாறு.

செப்டம்பர் 4ந்தேதி காலை 5 மணியளவில் சந்திரபாகா நதியில் நீராடினோம். பாண்டுரங்கனுக்கு நடந்த அபிஷேகத்தை வெளிப்புறப்படியில் நின்று பார்த்து விட்டு வந்தோம். திரு துக்காராம் - கணபதி திருச்சியிலேயே எங்களிடம் அர்ச்சகர் திரு. அணிருத்பாட்டீலை பண்டரீபுரத்தில் அறிமுகப்படுத்திக்கொண்டால் கோயில் நிகழ்ச்சிகளை நல்லபடி முடித்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருந்தார். அதன்படி அவரை எங்கள் வான் ட்ரைவர் மூலமாக எங்களை சந்திக்க மடத்திற்கு கூப்பிட்டிருந்தோம். அவரும் வரவே ஹிந்தி தெரிந்த சுலோசனா மொழிபெயர்க்க எல்லாவற்றையும் புரிந்துகொண்டு பாண்டுரங்கனுக்கு இரவு நேர பாதபூஜையும், விடியற்காலை அபிஷேக அலங்கார சேவையும் காண்பிக்க ஏற்பாடு செய்துகொண்டோம். அதன் பின் உப்புமா, ஓமப் பொடியுடன் காலை டிபன் முடித்துக்கொண்டு 9 மணிக்கு கோபால்பூர் சென்றோம்.

விஷ்ணுபாதம், கிருஷ்ணர் பசுமாடுகளுடன் உட்கார்ந்து மேய்த்துக் கொண்டு விளையாடிய இடம் ஆனதால் அவர் வந்துபோன பாதச்சுவடுகள் பதிந்த இடம் தெரிகிறது. பளிங்கு கல்லில் மஹா விஷ்ணு ஆனவை தரிசித்தோம். கோபாலகிருஷ்ண மந்திர் போய் பார்த்தோம். அங்கு சக்குபாய் சமாதி உள்ளது. கண்ணன் தயிர் கடைந்த மத்து இருக்கவே, மத்தைப் பிடித்து (காசுகொடுத்து) எல்லோரும் ஒருதரம் தயிர் கடைந்தோம். சக்குபாய் சமைத்த பாண்டங்கள், உறி, அடுப்பு, சப்பாத்தி தட்டிய கல், திருகைக்கல், தொட்டில் எல்லாம் பார்த்தோம். கோபால கிருஷ்ணர் கோயிலில் கோபாலகிருஷ்ணன் தனியாக இருக்க, மாமனார், மாமியார் தனியாக வேறு ஒரு இடத்தில் இருக்கிறார்கள். ஒரு குகைமாதிரி ஒன்றில் இறங்கிச் சென்று சக்குபாய், பாண்டுரங்கன் இவர்களை தரிசித்துவிட்டு வெளியேறினோம்.

அங்கிருந்து சந்த் கைக்கடி மஹராஜ் மடத்திற்கு 11½ மணிக்கு சென்று ஒரு அருங்காட்சியகத்தில் பிரவேசித்தோம். இதன் அமைப்பு ஒரு மலையை ஏறி இறங்குவது போலவும் சுற்றி சுற்றி வருவதாகவும் மாடியும் சுரங்கஅறையாகவும் கொண்டிருந்தது. மஹாபாரதம், ராமாயணம், நான்கு வேதங்களில் வரும் வரலாற்று கவிதைகள் சிலைகள், பொம்மைகள், சித்திரங்கள் கொண்டு நிறைய காட்சிப்பொருட்களாக படைத்திருக்கிறார்கள். பொம்மை ரயில் ஒன்று நிஜம் போலவே இருந்தது. அண்ணாந்து பார்க்கும்படி பெரிய ஆஞ்சனேயர், ராமலக்ஷ்மணர் வில்லுடன் இருக்கும் காட்சியை பார்த்துவிட்டு ஒரு பெரிய திமிங்கலத்தின் வாயில் நுழைந்து இறங்கி வெளிவந்தோம். பின் கஜானன மடத்திற்கு சென்று சாப்பாட்டை முடித்துக்கொண்டு 3 மணியளவில் 22 கி.மீ தூரத்திலுள்ள ஆரண் வந்தடைந்தோம். சாது சிரோமணி சன்வதாமாலி பிறந்த ஊர் அது. அவருடைய ஜீவசமாதியும் உள்ளது.

இவர் எந்த ஊருக்கும் போகாமல் இங்கேயே பண்டரிநாதன் மேல் அவ்வளவு பக்தியுடன் இருந்தாராம். அதனால் பண்டரிநாதனே இவரைப்பார்க்க இங்கு வந்து சேவை சாதித்தாராம். இவருக்கு குளிக்க ஒரு கிணறு வெட்டிக் கொடுத்திருக்கிறார் பகவான். கர்ப்பகிருஹத்தில் சவதாமாலி.முகம் அலங்காரத்துடன் இருக்க, அவர் பின்னால் பாண்டுரங்கன் நின்ற நிலையில் சிரித்த முகத்துடன் இருக்கிறார். அங்கு சிறிது நேரம் பஜனை பாடினோம். சந்நிதிக்கு முன்பக்கம் மஹாராஷ்ட்ராவில் எல்லா கோயில்களிலும் சலவைக்கல்லில் ஆமை பதித்து வைத்திருக்கிறார்கள். ஆமை தன் உடம்பை, கை கால்களை ஓட்டின் உள்ளே எப்படி அடக்கி வைத்திருக்கிறதோ அதே மாதிரி புலன்கள் மீது ஆசைகளை எல்லாம் போகவிடாமல் மனதை அடக்கிக் கொள்ளவேண்டும் என்ற உதாரணம் போலும்.

அடுத்து போக வேண்டிய தன்பூரிமஹாராஜ் மடத்திற்கு மாலை 5மணியளவில் வந்தோம். அங்கு கலைக்கூடம் ஒன்றுள்ளது. அங்கு மடத்தில் ஏழைகளுக்கு அன்னதானம் செய்யும் ஏற்பாடு இருந்தது. நிறைய ஏழைகள் ரொட்டி சாதத்திற்காக காத்துக் கொண்டிருந்தனர். நம்மில் சிலர் அதற்கு நிதி உதவி கொடுத்தனர். கலைக்கூடத்தின் முகப்பில் பெரிய ஆஞ்சனேயர் சஞ்சீவி மலையைத் தூக்கி செல்வதுபோல அமைப்பு இருந்தது. கலைக்கூடத்தின் உள்ளே ராமாயண, மஹாபாரத சித்திரங்களுடன் கூட பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்கள், பகீரதன், கங்கை, சிவன், பார்வதி, பண்டரிநாதன், ருக்மணி, கண்ணாடியில் தெரியும் பல உருவ கிருஷ்ணர், துக்காராம், ராமர், லக்ஷ்மணர், பரதர், சத்ருக்னர், துவாரகர், ஜகதம்பா, குரு தத்தாத்ரேயர், பத்ரிநாராயணர், பூரிஜகன்னாதர் ஆகியோர் சிலைகளனைத்தையும் பார்த்தோம். அங்கு நுழைவாயிலில் மாம்பழக்கனியைப் பெற கணபதி தன் தாய் தந்தையரை சுற்றி வந்த காட்சியினை பொறியினால் இயங்கியது பார்க்க ரம்யமாக இருந்தது. ஒரே இடத்தில் இருந்த ஜோதிர் லிங்க உருவங்கள் வருமாறு: ராமேஸ்வரர், கேதார்நாதர், ஓங்காரேஸ்வரர், சோமநாதர், மல்லிகார்ஜுனர், மஹாகாலேஸ்வரர், காசிவிஸ்வநாதர், த்ரையம்பகேஸ்வரர், நாகநாதர், பர்லி வைத்தியநாதர், க்ருஷ்ணேச்வரர், பீமாசங்கரர் ஆகியோரைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது.

மாலை 6 மணிக்கு கஜானை மஹாராஜ் மடத்திற்கு திரும்பினோம். தேநீர் அருந்திய பின் பண்டரிபுரம் கடைவீதி சென்றோம். 8.30 மணிக்கு இரவு உணவு சாப்பிட்டு பின் சிறிது ஓய்வெடுத்துவிட்டு, இரவு 9.45க்கு ஸ்ரீவிட்டலர் ருக்மாயி கோவிலுக்கு திரு அநிருத் பாடீல் திட்டப்படி பண்டரிநாதன் பாத பூஜைசேவை பார்க்கப்போனோம். விட்டலர் ஸ்வயம்புவாக தோன்றியவர். முழங்காலிலிருந்து பாதம்வரை வெள்ளி கவசம் அணிவித்திருந்தார்கள். விட்டலருக்கு பாதபூஜை ஐந்தைந்து பேராக செய்தோம். ரூ. 500 கட்டினால் 5 பேர் அனுமதி என்றபடி ஒவ்வொருவரும் ரூ. 100 கட்டி 4 பிரிவாக உட்காரச் சொல்லி, ஒவ்வொரு

பிரிவையும் மூலமூர்த்தி வரை பக்கத்தில் சென்று சேவிக்க அனுமதித்தார்கள். நம் கோயில்களில் இப்படி அனுமதி இல்லை. தீர்த்தம், பால், தயிர், தேன், பொடி சர்க்கரை, வாசனை திரவிய பவுடர் இவைகளால் நாங்களே செய்வதாக அபிஷேகம் செய்து பின்னர் பாதம் அலம்பி, மஞ்சள், குங்கும், அரிசி, அட்சதை, கருப்புபொடி, சீரகம் முதலியவைகளை சமர்ப்பித்தோம். வாழைப்பழம், உருண்டையான வெள்ளைநிற சர்க்கரை மிட்டாய் நெய்வேத்தியம் செய்து ஆரத்தி செய்தோம். இந்த நிகழ்ச்சி எல்லோருக்கும் மிகுந்த மனநிறைவாய் இருந்தது. பாதத்தில் வைத்து எடுத்த முழு மட்டை தேங்காய் எங்கள் கையில் கொடுத்தார்கள். அபிஷேகம் செய்த அனைவருக்கும் பூமாலை அணிவித்தார்கள். அது எங்கள் அனைவருக்கும் நற்பாக்கியமாகும். தேங்காயை வீட்டின் வாசல் முன்னால் கட்டிவைக்கச் சொன்னார்கள். ஸ்தலவிருக்ஷம் கங்கோ பாத்ரா ஆகும். பிறகு தனித்தனியாக இருந்த சந்நிதிகளில் ருக்மணிதேவி, சத்தியபாமா, ராதிகாதேவி ஆகியோரை தரிசனம் செய்தோம். பல கிளைகள் உள்ள கல்லாலான பெரிய தீபஸ்தம்பம் உள்ளது. கஜானன மடம் வந்து 11.30 மணிக்கு படுத்து தூங்கினோம்.

5ம் தேதி காலை 3.30 மணிக்கு எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு ஸ்ரீவிட்டலர் ருக்மாலி ஆலயத்திற்கு விடியற்காலை அபிஷேக சேவை பார்க்கச் சென்றோம். காத்திருந்த சமயம் இரண்டு பஜனை பாடல்கள் பாடவே கதவு திறந்து விட்டபடியால், 4 மணியளவில் சந்நிதியுள் சென்று சந்நிதி அருகில் ஆண்களும், அடுத்த மண்டபத்தில் பெண்களும் பகவான் நேராக தெரியுமாறு உட்கார்ந்து கொண்டோம். பண்டா பள்ளியெழுச்சி பாடினார். முதலில் விட்டல ருக்கு கண் துடைத்தார்கள். எழுப்ப, பல் தேய்க்க ஒவ்வொன்றுக்கும் மந்திரங்கள் கூறினார்கள். பின் பால், தயிர், வெண்ணெய் சாக்கரை வாயில் ஊட்டி தீபாராதனை செய்தார்கள். பின் அணிந்திருந்த மாலை, வஸ்திரங்களை கழற்றி சிவப்பு போர்வை சாத்தி எடுத்ததும் ஏகாந்தசேவை கண்டுகளித்தோம். அதன் பிறகு விட்டலர் உடல் முழுவதும் சிவப்பு எண்ணெய் காப்பு தடவிவிட்டு, தண்ணீர், சந்தனம், பால், தயிர், தேன், பொடிசர்க்கரை ஆகியவற்றால் அபிஷேகம் செய்து, பிறகு அலங்காரம் பண்ணி பூமாலைகள் சாத்தினார்கள். அபிஷேகம் செய்யும்போது பாதத்திலிருந்து முழங்கால் வரை வெள்ளிகவசம் வைக்கிறார்கள். சிரசில் தங்க க்ரீடம் சாத்தினார்கள். பிறகு தீபாராதனை, கண்ணாடி உபசாரம் எல்லாம் முடிந்தபின் முகத்தில் ஒரு பளபளப்பாக இருந்த சிவந்த பொடியைப் பூசினார்கள். பிறகு விட்டலர் அருகில் சென்று ஒவ்வொருவராக பாதத்தைத்தொட்டு சேவிக்க அனுமதி கிடைத்தது. அபிஷேகம் செய்த பிரசாதத்தை எல்லோருக்கும் கொடுத்தார்கள். கல்கண்டு, சிறிய உருண்டை சீனிமிட்டாய்கள் பிரசாதம்.

முன்மண்டபத்தில் ஒரு தூணில் வெள்ளிக்கவசம் போடப் பட்டிருந்தது. - அதில் கருடாழ்வார் இருப்பதைப்பார்த்து அதை

ஆலிங்கனம் செய்து கும்பிட்டோம். ஸ்வாமிக்கு வலப்புறம் தள்ளி ஒரு செந்நிற விநாயகர் காட்சி தந்தார். 6.30 மணியளவில் தங்குமிடம் திரும்பி 8.15க்கு டிபன் சாப்பிட்டு 10 மணியளவில் ராமகிருஷ்ண ஹரி, வாசுதேவஹரி என்ற கோஷத்துடன் பண்டரிபுரத்திலிருந்து வெளியேறினோம். கொல்ஹாபூர் போகும் வழியில் மீரஜுக்கு 5 கி.மீ அருகிலிருக்கும் வாச் என்ற ஊரில் ராமர் கோவில் பிரகாரத்தில் மதிய உணவு அருந்திவிட்டு, ராமர் சீதை அனுமன், லக்ஷ்மணர், சிவன் ஆகியோரை தரிசித்தோம். 2.30க்கு புறப்பட்டு 4.45க்கு கொல்ஹாபூர் வந்தோம். ஜோதிபா என்ற ஊரை மாலை 5.30 மணிக்கு அடைந்தோம். இது ஒரு மலைபிரதேசம். வழி திருப்பதியோ அல்லது மைசூர் சாமுண்டேஸ்வரி கோவிலோ போவதுபோல் சுற்றி வளைந்து மலையில் சென்றது. மலை ஏறினால் ஜோதிபா கோயில் இருக்கிறது. இது ஒரு சிவன் கோவிலாகும். வான்செல்லும்போது மழைபெய்தது. மராத்திய அரசர் சிவாஜியின் வழியில் வந்த யஸ்வந்தராவ் பாண்டுரங்கா என்பவரால் தான் சிவனை வேண்டிக்கொண்டு ஒன்பது காரியங்கள் நிறைவேறியமைக்காக நன்றிகடனாக இந்த கேதார்லிங்க கோயிலை ஜோதிபாவில் கட்டியிருக்கிறார். இங்கு பத்ரிநாராயணன், கேதாரீஸ்வரர் தரிசித்தோம்.

மாலையில் தேநீர் அருந்திவிட்டு 6மணிக்கு கிளம்பி 7மணிக்கு கொல்ஹாபூர் மஹாலக்ஷ்மி கோயிலுக்குச் சென்றோம். அங்கு லக்ஷ்மி, சரஸ்வதி, காளிமூவர் தனித்தனியான சந்நிதியில் தரிசித்தோம். சாளுக்கிய அரசன் கரண்தேவினால் 7வது நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்தகோவில் நிர்மாணக்கலையின் சிகரமாய் உள்ளது. கோயிலின் முக்கியப் பகுதி தூண்கள் நிறைந்த கோயிலாகும். அவை விசிறி மடிப்பு மடித்தது போல் நுட்பமான சிற்ப வேலைப்பாடுகளுடன் இருந்தது. வெளிவரும் வாசற்படியருகே சுவற்றில் ஒரு சாக்ஷிபிள்ளையார், அருகில் ஸப்தரிஷிகளுடன் இருந்தார். அம்பாபாய் என்று அழைக்கப்படும் மஹாலக்ஷ்மி ஸ்ரீ சக்கரத்தில் அமர்ந்துள்ளார். ஒரு மண்டபத்தில் சமர்த்தராமதாசர் ஆரத்தி நடந்து கொண்டிருந்தது. மஹாலக்ஷ்மி கோவிலுக்கு அருகாமையில் வெளியில் ஹபவானி கோயில் உள்ளது. பவானியம்மன் மராட்டிய ராஜாவின் குலதெய்வமாகும். 8மணிக்கு புறப்பட்டு மலைப்பகுதி பாதையில் வந்து 11மணியளவில் சாபல் சேர்ந்தோம். இரவு உப்புமா சாப்பிட்டுவிட்டு தூங்கினோம்.

சாபல் சதாரா போவதற்கு முன்பாகவே 35 கி.மீ. தூரத்தில் உள்ள ஊர். இங்கு ஸ்ரீ சிவாஜி மஹாராஜை சமர்த்த ராமதாஸர் முதன்முறையாக சந்தித்தார். நாங்கள் தங்கி இருந்த சமர்த்தராமதாஸர் மடத்தில் 6ந்தேதி காலையில் எழுந்து குளித்துவிட்டு, பக்கத்திலேயே ராமதாஸரால் கட்டப்பட்ட ராமர்கோவிலுக்குப் போனோம். பஜனை செய்தோம். இக்கோயிலை முப்பது வருஷங்களுக்கு முன் மபத்லால் க்ரூப்பைச் சேர்ந்தவர்கள் சலவைக் கல்லினால் கட்டி புதுப்பித்து கொடுத்தி ருக்கிறார்கள். அங்கு ராமர், லக்ஷ்மணர் புன்னகை பூத்த முகத்துடன்

பால் வடியும் பச்சை நிற உடையோடு சீதையுடன்கூட காட்சி அளித்தார். அருகில் ஆஞ்சனேயர் உடனிருந்தார். சந்நிதிக்கு முன் இடப்பக்கம் விநாயகரும், வலபக்கம் ஆஞ்சனேயரும் இருந்தனர். முதலாமவர் தாஸமாருதி, நேர் எதிர்பக்கத்தில் ஆஞ்சனேயர் வீரமாருதியாக கோயில் கொண்டு உள்ளார். பக்கத்திலே ஒரு ஆறு ஓடுகிறது. ஒரு புறத்தில் 2, 3 படி இறங்கி குறுகலாக இருந்த சமர்த்த ராமதாஸர் தியானம் செய்த குகையை உள்ளேபோய் பார்த்தோம். இங்கு சிவாஜிகூட வந்து தியானித்தாராம். இங்கு ராமதாஸருடைய அஸ்தியும், ஒரு துளசி மாடமும் இருக்கிறது. சிறிது நேரம் பஜனை செய்துவிட்டு டிபன் சாப்பிட்டோம். இங்கிருந்து 8 மணியளவில் புறப்பட்டு மலைப்பகுதி பாதை வழியாக வந்து 9.45 மணியளவில் சதாரா வந்தோம். சத்ரபதி ஷாஹுமஹராஜினால் அஜிங்க்யதாரா மலையடிவாரத்தில் ஏற்படுத்திய அழகான மலையடிவார கோட்டையுள்ள நகரமாகும் சதாரா.

இங்கு காஞ்சி காமகோடி சங்கராச்சாரியாரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட உத்தர சிதம்பரம் என்று அழைக்கப்பட்ட, நடராஜர் கோயில் உள்ளது. தமிழ் நாட்டின் சிதம்பரம் போன்றே நான்கு பக்கங்களிலும் கோபுரவாயில்களுடனும் நடுவே கூரை உடைய சித்சபையுடனும் கூடியது. தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா, மஹாராஷ்டிர மாநிலங்களின் அரசுகள் அமைத்துத்தந்த கோபுரயம்மன் .இவர்களுக்கு ஆரத்தி பார்த்தோம். சமிதி பெயரில் ஒரு அர்ச்சனை செய்தோம். சிதம்பர ரகசியம் ஆகாய தத்துவத்தை சொர்ண வில்வ மாலையை ஆட்டி காண்பித்தார் தமிழ்நாட்டு அர்ச்சகர். நடராஜர் பீடம் அருகிலேயே வெள்ளி சம்படத்தினுள் பச்சை வண்ண மரகதலிங்கம் வைத்திருக்கிறார்கள். 10.30க்கு அதற்கு பால அபிஷேகம் செய்ய, அதையும் தரிசனம் செய்தோம். பக்க கோபுரவாசல் வழியாக நுழைந்து அடுத்திருந்த ஐயப்பனையும் தரிசித்தோம்.

10.45க்கு புறப்பட்டு 19 கி.மீ. தொலைவிலுள்ள ஸஜ்ஜன்கட் என்ற ஊரை 12 மணியளவில் அடைந்தோம். மலைக்குமேல் சமர்த்த ராமதாசரின் சமாதி உள்ளது. இம்மலை கிருஷ்ணா நதிக்கரையிலிருந்து 1800 அடி உயரத்தில் உள்ளது. மலை ஏறுவதற்கு சுமார் 100 படிகள் தொடர்ச்சியாக இல்லாமல் கொஞ்சம் தூரம் நடந்துபோய் 2, 3 படிகள் ஏறுவதாக இருந்தது. மலைமீதிருந்த சாமதாசரின் சமாதி கட்டடத்தில் கீழே சமாதியும், மேலே அம்பா மாதா ஆலயமும் இருந்தது. சமாதியை அடுத்து ராமதாஸர் தியானம் பண்ணிய இடம் இருந்தது. இங்கு ஒரு 5 நிமிஷம் உட்கார்ந்து தியானமும் பண்ணினோம். அம்பாமாதா ஆலயம் பக்கத்தில் சீதை, ராமர், லக்ஷ்மணர், அனுமன் கூடிய ஆலயம் இருந்தது. காரியாலய அறையில் ராமதாஸர் பூஜித்த விக்ரஹங்கள், பூஜைக்கான நகைகள், சிவாஜி சமர்த்த ராமதாஸருக்கு கொடுத்த கட்டில், சிவாஜி கொடுத்த வாள், பாம்பு போன்ற குச்சி, ஹனுமான் உடுத்திய வஸ்திரம், கீழே கிருஷ்ணா ஆற்றிலிருந்து மலை மீதுள்ள கோவிலுக்கு பூஜைக்காக ஜலம் கொண்டுவரும் இரண்டு பெரிய செப்புக்குடங்கள் ஆகியவற்றைப்

பார்த்தோம். திரும்பும்போது ஒரு பக்கத்தில் தனியே சீதாதேவி கோயில் இருந்தது. மலையின் நடுவில் ஒரு மசூதி உள்ளது. ராமதாஸரும் சிவாஜியும் தீர்த்தயாத்திரை சென்றிருந்த போது ஔரங்கசீப் படையெடுத்து வந்தவன் மலையை முற்றுகையிட்டபோது தொழுகைக்காக இந்த மசூதியை ஒரே வாரத்தில் கட்டினானாம். அதை கட்டுவதற்கு சுண்ணாம்பு சாந்து குழைக்க ஒரு சிறிய சுனை (குளம்)யையும் தோண்டி இருக்கிறான். பக்கத்திலேயே சுண்ணாம்பு காரை அறைக்க ஒருவட்ட பாதையில் போகும் செக்கு போன்ற கல் இயந்திரம் இயக்கி தயாரித்தது தெரிய வருகிறது. சிவாஜியின் இந்த கோட்டையில் பெரியவர்கள் சேர்ந்து பக்தி நெறிகளை பரப்புவதற்கு கூட்டம் கூட்டி பேசினார்களாம். அந்த கூட்டத்தில் நாமதேவர், ஏகநாதர், ஞானேஸ்வரர், துக்காராம், சமர்த்த ராமதாஸர் போன்ற சாதுக்கள் கலந்து கொண்டனராம். மராட்டிய சிவாஜி காலத்தில் குருமார்கள் பேரவை நடத்திய காரணத்தினால் இந்த ஊர் ஸஜ்ஜன் கட் என்று அழைக்கப்படுகிறது.

மாலை 3.30க்கு சாப்பிட்டுவிட்டு 4.30க்கு மஹாபலேஸ்வருக்கு புறப்பட்டோம். மாற்றுப்பாதையில் போனதாலும், மழை பெய்து இருந்தாலும் 20 கி.மீ. தூரமே ஆனாலும் மலையேறி 6.30 மணிக்கு உச்சியை அடைந்தோம். மலையேறும்போது சிறுசிறு நீர்வீழ்ச்சிகள் இருக்கக் கண்டோம். மஹாபலேஸ்வரத்தில் ஸ்வாமி தரிசனம் செய்தது ஏதோ ஆகாய உச்சியில் இருந்தது போன்ற எண்ணத்தைத் தந்தது. லிங்கம் ஸ்வயம்பு வடிவமானது. இடப்பக்கம் ஆவுடையார் பெரிதாய் இருந்தது. லிங்கத்தின் மேல் நீர் கட்டிக் கொண்டே இருக்கிறது. பித்தளைக்காப்பு சுற்றி போட்டிருந்தார்கள். பைரவரும் ஆலயத்தில் இருந்தார். 7.40க்கு புறப்பட்டு 9 மணிக்கு 40 கி.மீ. தூரத்திலுள்ள 'வை' வந்தடைந்தோம். கிருஷ்ணா நதிக்கரையில் அமைந்துள்ள புனிதஸ்தலம் இது. டோல்ய கணபதி என்ற ஒரே கல்லாலான பெரிய விநாயகரை தரிசனம் செய்தோம். பக்கத்தில் தக்ஷிணகாசி விஸ்வநாதரை தரிசித்துவிட்டு சதாராவில் தங்குமிடத்திற்கு 10.30 மணிக்கு வந்து இரவு தங்கி தூங்கினோம். வரும் வழியில் அன்று சந்திரனை தரிசிக்க முடிந்தது.

செப்டம்பர் 7ம் தேதி காலை 7மணிக்கு சதாராவில் கிருஷ்ணா நதியில் நீராடினோம். நதிக்கரையில் நன்கு கட்டப்பட்ட அழகான பல படித்துறைகள் இருக்கின்றன. நீராடியபின் படித்துறைவிட்டு மேலே வரும் போது காசி விஸ்வநாதர், கங்கை, ராமேஸ்வரர், லக்ஷ்மிநாராயணர் ஆகியோர் ஆலயங்கள் பார்த்தோம். 9.30க்கு காலை சிற்றுண்டி சாப்பிட்டோம்.10.45க்கு கிளம்பினோம். சதாரா - பூனே சாலையில் இடைப்பட்ட ஜெஜூரி என்ற ஊருக்கு 2.30 மணிக்கு வந்து மதிய உணவு சாப்பிட்டோம். அதற்கே சிறிது காலதாமதம் ஆகிவிட்டதால் 3.30 மணிக்குதான் பசியாற முடிந்தது. மாலை 4.15 மணிக்கு புறப்பட்டு தேவூர் வந்தடைந்தோம். முலமுத்தா ஆற்றங்கரையில் உள்ள சிந்தாமணி கணபதியை தரிசித்தோம். இது அஷ்ட கணபதிகளுள் ஒன்று. இந்த

கணபதி 2000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஒரு ஸ்வயம்பு கணபதியாவார். 5.30க்கு புறப்பட்டு ஆலந்தி வந்தோம். 7 மணிக்கு இந்த்ராயணி ஆற்றங்கரையிலுள்ள ஸ்ரீஞானேஸ்வரர் சமாதியைப் பார்த்தோம். இவர் தனது 21வது வயதில் சமாதி அடைந்தார் ஞான தேவருடைய இலக்கியம் எனத்தகும் நூல்களில் 'ஞானேசுவரி' (பகவத்கீதையின் விளக்கமே இது) உணர்ச்சி பொங்கிட ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் பயின்றிடத் தகுந்ததாகும். இது வாழ்வில் ஒருவன், தான் மனிதன் என்ற முறையிலும் சரி, உலகத்தோடு பழகும்போதும் சரி எப்படி இருக்கவேண்டும் என்பதை அறிவுறுத்துகின்றது. ஆலந்தியில் உள்ள ஸ்ரீ சித்தேச்வரி கோயிலுக்கு அருகில் குகைபோல் தோண்டி பூமிக்கடியில் அமைந்த இடத்தில் மரத்தாலான மேடையில் அசைவற்று, கண் முடித்தியானத்தில் லயித்தார். அந்த ஜீவாத்மா உடலைவிட்டு, எவரும் காண இயலாதபடி வாழ்வு - மரணம் என்ற சிறகு படைத்துப் பரமாத்மனுடன் கலந்திடும் பறவையெனப் பறந்து சென்றது.

பல வருஷத்து மரம் அஜான விரட்சம் உள்ளது. அதை எல்லோரும் வணங்கினார்கள். சமாதிக்கு முன்னால் வெள்ளித்தகடு பதித்த தூண் இருந்தது. இதில் எல்லா மஹான்களும் இருக்கின்றனர். எனவே இதை கட்டி அணைத்து ஆலிங்கனம் செய்து கும்பிட்டோம். இவர் சமாதியிலிருந்து சற்று தூரத்தில் இவர், சகோதரர்கள் நிவ்ருத்தி, நாதர் ஸோபானர், சகோதரி முக்தா ஆக நால்வரும் ஒரு கண்ணாடி பெட்டியில் வரிசையாக காட்சி கொடுத்தனர். பெரிய யோகிகளில் ஒருவரான சங்கதேவர் ஞானேஸ்வரரைப்பற்றி கேள்வியுற்று அதிர்ச்சியடைந்து ஒரு பெரும் புலியின் மீதமர்ந்து, கொடிய நச்சுப்பாம்புகளைக் கையில் சாட்டைகளாக ஏந்திக் கொண்டு ஆலந்திக்குப் புறப்பட்டார். ஞானேஸ்வரர் ஒரு இடிந்த விட்டின் குட்டிச்சுவரின் மேல் தம் தங்கை முக்தாவுடனும் சகோதரர்களுடனும் அமர்ந்திருந்திருந்தார்கள். தாம் அமர்ந்திருந்த மண் சுவரைத் தட்டிக்கொடுத்து, சுவரே இப்படியே கிளம்பி அந்த மகானைத் தரிசித்து வரவேற்போம் என்றார். அந்த சுவரும் அப்படியே அந்தரத்தில் கிளம்பி சங்கதேவரை நெருங்கியது. இதைக் கண்ட மக்களும் சங்கதேவரும் திகைத்துவிட்டார்கள். சங்கதேவரை உடனே ஞானதேவரின் காலடியில் விழுந்து வணங்கினார். அகந்தையை உள்ள வலிமையினால் அடக்கிவிட்டார் ஞானேஸ்வரர். ஞானேஸ்வரரை சங்கதேவரை அணைத்துக்கொண்டார். பிறகு இங்கிருந்து புறப்பட்டு 10 மணிக்கு தேஹூ வந்து அடைந்தோம்.

தேஹூ சாது துக்காராம் பிறந்த ஊர். மற்றும் அவருடைய சமாதியும் இங்கே இருக்கிறது. துக்ராம் படைத்த அபங்கங்கள் மராத்தி மொழியில் பக்திப்பாடல்கள் விட்டலரைப் போற்றிப் பாடியவையாகும். துக்காராமின் வைகுண்ட கமன் பார்த்தோம். பக்தனுக்காக இறைவன் மஹாவிஷ்ணு (விட்டலர்) கருடவாகனத்தில் வந்து சாதுதுகாராமை கருடன் மீதேறிக் கொண்டு வைகுண்டம் அடையச் செய்தாராம். துக்காராம் சமாதியில் துக்காராம் தம்பூரா வைத்துக்கொண்டு நிற்பதையும், பின்னால்

பாண்டுரங்கன் ருக்மணி இருப்பதையும் பார்த்தோம். சுமார் 10.30க்கு புறப்பட்டு இரவு 1.30 மணிக்கு பாலி வந்தடைந்தோம். லாட்ஜில் ரூம் பிடித்து படுப்பதற்க்கு 2.30 ஆகிவிட்டது.

செப்டம்பர் 8ம்தேதி காலை 7 மணியளவில் தப்தகுண்ட் என்னும் வெந்நீர் ஊற்று குளத்தில் குளித்தோம். அருகில் விட்டலர், குக்குமாயி கோயிலும், பிள்ளையார் கோவிலும் பார்த்தோம். பல்லாலேஸ்வரர் என்ற பெயருடைய இந்த கணபதி அஷ்ட விநாயகர்களில் ஒருவராவார். இந்த பிள்ளையாருக்கு தலைகவசத்தில் காதருகில் மீன் போன்ற வடிவம் வெள்ளியில் பொருத்தப்பட்டிருந்தது. 9.10க்கு கிளம்பி, பூனா - மும்பை ரோடில் இருபுறமும் மேற்குத் தொடர்ச்சி மலையின் இயற்கைக் காட்சிகளை பார்த்தவாறே பயணம் செய்து 10.25க்கு மஹத் என்ற ஊரை அடைந்தோம். வரத் விநாயகர் ஆலயம் இங்கே இருக்கின்றது. இவர் அஷ்ட விநாயகர்களில் ஒருவராவார். இங்கு மங்களேச்வரர் ஸ்வாமியையும் தரிசித்தோம். இங்கிருந்து 11.30க்கு புறப்பட்டு மலைப்பாதையின் வழியில் அருவிகளைப் பார்த்துக் கொண்டே ஓஜ்ஜார் என்ற ஊருக்கு 5.45க்குப் போனோம். இடையில் ஒரு இடத்தில் மரங்களின் அடியில் சாப்பிட்டு பின் அங்கிருந்து 2.30க்கு கிளம்பினோம். ஓஜ்ஜாரில் அஷ்ட வினாயகர்களில் மற்றொருவரான விக்னேஸ்வரர் அல்லது விக்னஹர கணபதியை தரிசித்தோம். இது குக்டி ஆற்றங்கரையில் அமைந்த கருங்கல்லில் செதுக்கப்பட்ட சிற்பமாகும். நெற்றியில் வைரமும் கண்களில் ரூபிகல்லும் பதிக்கப்பட்டது. இங்கிருந்து 6.40க்கு கிளம்பி 7 மணியளவில் லென்யாத்ரி வந்தோம். இங்கு மலையில் குகைக்குள் கணபதி கோயில் கொண்டுள்ளார். இவர் பெயர் 'கிரிஜாத்மஜ' என்பதாகும். சுமார் 300 படிகள் மலையேறிச் சென்று முழுகோவிலும் சபைமண்டபமும் மலையிலே குடைந்து செய்யப்பட்டிருந்ததைக் கண்டு வியந்தோம். புத்த சம்மந்தமுள்ள 18 குகைக்கோயில்களில் 8வது குகைக்கோயிலை மட்டும் நாங்கள் பார்த்தோம். பகல் வேளையில் இந்த விநாயகர் கோயிலில் சூரிய வெளிச்சம் பட்டுக்கொண்டிருக்குமாம். அது 50, 51 அடி நீள அகலங்கள் கொண்ட பெரிய ஹால்மாதிரி மண்டபமாக இருந்தது. பக்கத்தில் ஒரு அனுமன் சந்நிதி இருந்தது.

லென்யாத்ரியில் இரவு தங்கிவிட்டு 9ந்தேதி காலை 5.30மணிக்கு எழுந்து குளித்துவிட்டு பஜனை செய்தோம். டிபன் முடித்துவிட்டு 8.30 மணிக்கு பீமாசந்ங்கா புறப்பட்டோம். வழி மலைப்பாதை ரோடு, அடர்ந்த காடுகளில் வனவிலங்குகளின் சரணாலயமும், பறவைகளின் சரணாலயமும் உள்ளன. 'டிம்பா' என்ற அணைக்கட்டும் வழியில் பீமா நதியின் மீது உள்ளது. பீமாசங்கர் பன்னிரண்டு ஜ்யோதிர் லிங்கங்களில் ஒன்றாகும். பகல் 12 மணிக்கு கோவிலுக்கு சென்றோம். அந்நேரம் சிவனுக்கு அபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. உயரமான சாலையிலிருந்து இறங்கி 12.20க்கு கீழே சென்று நுணுக்கமான சிற்பவேலைப்பாடுகள் கொண்ட கோயிலைப் பார்த்தோம். ஐந்து முகம்

கொண்ட சிவன் இருந்தார். சூலம், உறி ஆகியவை இருந்தன. பீமாசங்கருக்கு ஜலம், பால், விபூதி, மஞ்சள் அபிஷேகம் பார்த்தோம். சிவன் உச்சி நடுவில் கோடு திரி ஒரு பள்ளம் இருக்கிறது. பீமன் என்ற பெயருடைய ராட்க்ஷசன் ஒருவனை சண்டையில் தோற்கடித்து எரித்ததற்கு முன் அந்தராட்க்ஷசன் வாள் வீச்சினால் தலையில் ஏற்பட்ட காயத்துடன் பீமாசங்கர் நாரதர் வேண்டுகோளுக் கிணங்கி இவ்வாறு காட்சி தருகிறாராம். சன்னிதிக்கு எதிரில் கொடிமரத்தின் அருகில் சனீஸ்வர பகவான் இருந்தார். பிரதக்ஷிணம் வரும்போது ஒரு குளம் இருந்தது. குளத்தின் சுவற்றில் பிள்ளையார் சிலை இருந்தது. பிறகு கிளம்பி 3 மணிக்கு கோடேகாம்வ் வந்து மதிய உணவு சாப்பிட்டு புறப்பட்டோம். 4 மணிக்கு கிளம்பிய நாங்கள் 220 கி.மீ பயணம் செய்து 9.15க்கு நாஸிக் வந்தடைந்தோம். முக்தி தாம் என்ற இடத்தில் தங்கி 10.30க்கு சாப்பிட்டுவிட்டு 11 மணிக்கு தூங்கினோம்.

பத்தாம் தேதி காலை முக்திதாமியின் முகப்பில் இருந்த லக்ஷ்மி நாராயணன், ராமர், லக்ஷ்மணர் கோயில் தரிசனம் செய்துவிட்டு காலை 6.45க்கு கிளம்பி த்ரையம்பகம் (36 கி.மீ. தொலைவிலுள்ளது) அடைந்தோம். போகும் வழியில் ஸ்ரீ ஹனுமானுடைய பிறந்த இடமாக கருதப்படும் அருஜனேரிக்கு செல்லும் ரோடு வந்தது. அஞ்ஜனேரி சென்று வருவதற்கு 5 மணி நேரம் ஆகுமென்றதால் அதற்கு போகவில்லை. 8 மணிக்கு த்ரையம்பகஸேவரர் கேயிலுக்குப் போய் தரிசனம் செய்தோம். பன்னிரண்டு ஜ்யோதிர்லிங்கங்களில் இது ஒன்று. இதனுடைய மாறுபட்ட சிறப்புத்தன்மை என்னவென்றால் பிரம்மா, விஷ்ணு, சிவன் வடிவங்கள் காட்டும் மூன்று முகங்களை உடையதாக இருக்கிறது. இது ப்ரஹ்ம கிரியின் அடிவாரத்தில் உள்ளது. கோயில் கட்டிட வேலைக்கும் சிறப்பு வேலைப்பாட்டிற்கும் பெயர் போனது. ப்ரஹ்மகிரி கோதாவரி நதியின் உற்பத்தி ஸ்தானமாகும். கௌதமரிஷி தவம் செய்த இடம். அவர் தவத்தால் ப்ரஹ்ம கிரியினின்று கோதாவரி நதி உற்பத்தியானதாம். கௌமுக் மலையினின்றும் ஊற்றாக வந்து கௌதமர் ஜடாமுடியில் விழுந்து வழிந்து ஓடுகிறது கோதாவரி நதி, லிங்கமானது அபிஷேகம் செய்யும்போது குழியில் மூழ்கியும் நீரை வெளியே எடுக்கும்போது மூன்று உருவங்களும் லிங்கத்தின் மேல்முனையில் உள்ளன தெரியவருகிறது. எனவே த்ரையம் பகேஸ்வர் என்ற பெயர் வழங்குகிறது. எதிர் வரிசையில் மேலே உள்ள கண்ணாடியில் தெளிவாக காண முடிந்தது.

பிறகு நாஸிக் வந்து கோதாவரி காட் என்னும் படித்துறையைப் பார்க்க வந்தோம். லக்ஷ்மணன் ஆத்திரமடைந்து சூர்ப்பணகையின் மூக்கை (நாஸியை) வெட்டிய இடம் பார்த்தோம். இதனால்தான் இந்த ஊருக்கு நாஸிக் என்ற பெயர் வந்ததாம். 15 மைலுக்கு அப்பால் உற்பத்தியாகும் கோதாவரிதான் அருணா, வருணா, கோதாவரி ஒன்று சேர்ந்து திருவேணி சங்கமமாக இருக்கிறது. ஆற்றங்கரையில் 108 குண்டங்கள் இருப்பதாகவும் அதில் மூ+னறு முக்கியம் என்றும் சொன்னார்கள்.

அவை ராமகுண்டம், லக்ஷ்மண குண்டம் மற்றும் சீதாகுண்டம் ஆவன. 'கோதாவரி காட்'டில் 10 மணியளவில் படித்துறையில் அகல்விளக்கேற்றி தொன்னையில் வைத்து ஆற்றில் விட்டோம். இங்கு கும்பமேளா பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடக்கிறது. கோதாவரி அம்மன் கோயில் கதவு கும்பமேளா சமயத்தில் தான் ஒரு முறை திறக்கப்படும். தசரத மஹாராஜாவின் அஸ்தி சிவதரணியில் பிண்டம் போடப்பட்டதாம். இந்த கோதாவரி நதிதான் ராஜ மண்டரியில் கடலில் சங்கமமாகிறது. அங்கிருந்து சற்று தூரம் போனதும் கபாலேஸ்வரர் கோயிலில் தரிசனம் செய்தோம். இங்கே காலா ராமர், கோரா ராமர் கோயில்கள் பார்த்தோம். காலாராமர் கோயில் இந்தியா பூராவிலும் இங்குதான் உள்ளது. ராமர் கருமை வர்ணத்தில் சீதையை பறிகொடுத்த துக்கத்தால் காட்சியளிக்கிறாராம். ராமர், லக்ஷ்மணர், சீதை விக்ரஹங்கள் கலையில் சிறந்தவை. இவர்கள் வனவாசம் செய்தது தண்டகாரண்யம் இதுவென்றும் ஸ்நானம் செய்தது கோதாவரி த்ரிவேணியினென்றும் கூறப்படுகிறது.

காலாராமர் கோயில் சுமார் 400 வருஷங்களுக்கு முன்பு வெண்ணெய், வெல்லம், டீதூள் மூன்றையும் வைத்தே கட்டினார்களாம். ராமநவமியன்று ராஜகோபுரவாயில் வழியாக சூரியஒளி காலாராமர் மேல் விழுமாம். முன்மண்டபத்தில் ஆஞ்சநேயரும், வெளியில் வால்மீகி முனிவரும் இருக்கிறார்கள். சீதாமா தவம்செய்த குகை உள்ளது. ராவணன் சீதையை மாறுவேடத்தில் வந்து தூக்கிச்சென்றது புதன்கிழமை என்பதால் பெண்களை இந்த குகைக்குள்ளோ வெளியேயோ செல்ல விட மாட்டார்களாம். பர்ணசாலையில் பெண்கள் தலையில் முக்காடு போட்டு, வலது கால் முன் வைத்து தான் உள்ளே போக வேண்டுமாம். சுவரில் மூன்றடி உயரத்திற்கு ஒரு துவாரம் உள்ளது. அதற்குள் சென்றால் ராமலக்ஷ்மண சீதை ஆகியோர்களை தரிசித்து வெளியில் வரலாம். இதை அடுத்து எதிரில் உள்ள மாரீசன் கோயில், அங்கே மானை துரத்திக் கொண்டு ராமன் ஓடுவது போலவும், சந்நியாசி வேடத்தில் பிச்சை கேட்க வந்த ராவணன், மற்றும் சீதை பிச்சை போட வருவது போல் இருப்பதுமாகிய பொம்மைகள் வைத்திருக்கிறார்கள். பஞ்சவடி போய் பார்த்தோம். இங்கே சீதை தங்கியிருந்த ஐந்து ஆலமர விழுதுகளுள்ள பெரிய மரத்தடி பஞ்சவடியாகும். தங்குமிடத்திற்கு நாங்கள் 11.30க்கு திரும்பிவந்து டிபன் சாப்பிட்டு 12.40க்கு கிளம்பி 2.40க்கு ஷிரிடி வந்தடைந்தோம். சாயிபாபா அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட தர்மசாலை 200ல் 115 எண்ணுள்ள பெரிய ரூமில் தங்கினோம். இங்கு வரும் பக்தர்களுக்கு ரூ.4க்கு சாப்பாடு கொடுக்கிறார்கள். நாங்களும் போஜாசாலைக்குப் போய் டோக்கன் வாங்கி உள்ளே போனோம். பெரிய உணவுக் கூடத்தில் தத்தாத்ரேயர் சிலை இருந்தது. பரிமாற வரும் சாயி பக்தர்கள் மிகவும் சுறுசுறுப்பாக வேகமாக பறிமாறுகிறார்கள். பெரிய அண்டாக்களில் சாதம், குழம்பு, சப்பாத்தி, சப்ஜி வைத்து வண்டியில் தள்ளிக்கொண்டு வந்து போட்டு

முடிக்கிறார்கள். சாப்பிட்ட இடத்தை சோப்புத் தண்ணீர் ஊற்றி கழுவுகிறார்கள். அவர்கள் செய்யும் சேவையை நாம் சொல்லால் வர்ணிக்க முடியாது.

தர்மசாலை கட்டிடத்தில் தங்குமிடம், பெரிய பெரிய ஹால்கள் மாதிரி 200 அறைகள் கொண்டது. இருபது போர்கள் நன்றாக படுக்க புழக்கம் நிறைந்ததாக உள்ளது. குளியலறை, கழிப்பறைகள் ஆண்கள், பெண்கள் யாவர்க்கும் தனித்தனியாக நிறைய இருந்தன. சாமான்களை 115வது அறையில் வரிசையாக வைத்துவிட்டு மாலை 4.30க்கு சனி சிங்கணாபூர் பயணப்பட்டோம். இது 75 கி.மீ தூரத்தில் உள்ளது. இங்கு இருக்கும் சனீஸ்வரன் கோயில் விசேஷமானது. உருவமோ, கோயிலோ அல்லது ஸ்வாமி சிலையோ கிடையாது. தானாக வந்த ஒரு 4½ அடி உயரம் 1½ அடி அகலம் உள்ள கல் தூண் மட்டுமே கல்சிலை போன்று சனிபகவான் என உருவகப்படுத்தப்பட்டு வழிபடப்படுகிறது. 6.15க்கு கோயிலை அடைந்து அபிஷேகம், ஆரத்தி பார்த்தோம். நாங்கள் போன நேரம் மாலையாக இருந்ததால் சந்தி ஆரத்திக்கு சரியான வேளை 6.45 ஆரத்தி நடந்தது. எல்லோரும் குளித்து ஈர ஆடையுடன் தான் ஸ்வாமி தரிசனத்திற்கு வருகிறார்கள். எண்ணெய், பால், தயிர் முதலியவற்றால் அபிஷேகம் நடந்தது. இங்கு மண்டபத்தில் கருடவாகனத்தில் விநாயகர் பார்த்தோம். கருடன் வாயில் ஓர் நாகத்தை கவ்விக் கொண்டிருந்தது. இந்த ஊரில் எந்த வீட்டிற்கும் கதவுகள் இல்லை. திருடனே இல்லையாம். பொருட்கள் வைத்தது வைத்தபடி இருக்கும் என்பதும் மற்றொரு விசேஷம். எவன் ஒருவன் இங்கே திருடுவதற்கு முயலுகிறானோ அவன் உடனடியாக குருடனாகி விடுவதாக கருதப்படுகிறது.

இரவு சுமார் 9 மணிக்கு ஷீரிடி சாய்பாபாவின் சந்நிதிக்கு திரும்பி வந்தோம். சிறிது நேரத்தில் அவசரமாக பாபாவை தரிசனம் செய்துவிட்டு வந்தோம். பாபா கம்பீரமாக உட்கார்ந்து இருக்கிறார். அருகிலேயே சமாதி இருக்கிறது. மிகவும் பெரிய இடமான கோயிலுனுள் எப்படி நுழைந்து எப்படி வெளிவந்தோம் என்பதுகூட தெளிவாக புரியவில்லை. மறுபடி க்யூவில் நின்று போனோம். பஜனை, கீர்த்தனை கேட்க 9.30 மணிக்கு ஆரத்தி மண்டபத்தை அடைந்தோம். பஜனைகளின் முடிவில் 10 மணிக்கு ஷேஜாரத்தி என்ற சிறப்பான ஆரத்தி சேவை பார்த்தோம்.சரியான க்யூ என்பதால் சமாதி, பாதங்கள் எல்லாம் சேவித்துவிட்டு வெளியேறினோம். 11.30 மணியளவில் இரவு உணவு முடித்துவிட்டு தர்மசால முதல் கட்டிடத்தில் படுக்கச் சென்றோம்.

செப்டம்பர் 11ம் தேதி காலை எழுந்து நீரடிவிட்டு 6½ மணிக்கு காகட ஆரத்தி, புனித அபிஷேகம் ஆகியவை சாய்பாபாவிற்கு செய்யப்பட்டதைப் பார்த்தோம். இங்கே நடக்கும் ஆரத்தியைப் பார்த்தபோது, குருதேவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் மடத்து நினைவுதான் வந்தது. ஒரே சீருடையுடன் பகவான் பக்கத்தில் இருந்து, அவர்களுக்கு உதவுவதும், பக்தர்களை நடத்திச் செல்வதும் ஒரே சீராக இருந்தது. கோயிலுக்கு வெளியில் கிடைத்த லட்டு, பேடா ஆகிய

ப்ரசாதங்களை ஒவ்வொருவரும் தேவையான அளவு வாங்கினோம். பிறகு ஹரிபாபு என்ற தெலுங்கு பேசும் இளைய வழிகாட்டியின் உதவியுடன் பாபாவின் நிகழ்ச்சிகள் நடந்த முக்கிய இடங்களைப் பார்த்தோம். த்வாரகாமயி (மசூதி)யில் தரிசனம் தரும் அறை, பாபா சமையல் செய்த அடுப்பு, உட்கார்ந்து பூஜை செய்த இடத்தில் கைவைத்திருந்த மேடை, கால்கள் வைத்திருந்த இடம், அவர் ஏற்றி இன்னும் எரிந்து கொண்டிருக்கும் துணி என்னும் நெருப்புக்குண்டம், பிச்சை வாங்கிய பாத்திரம், தண்ணீர்குடம், திருகைக்கல், படுக்கை அறை, துளசிமாடம், தியானம் பண்ணிய இடம், வியாழக்கிழமைகளில்அவர் பவனிவந்த பல்லக்கு, அம்மிக்கல் ஆகியவைகளைப் பார்த்தோம். ஒரு பக்தர் பாபாவிற்கு ஒரு விநாயகர் விக்ரகம் கொடுத்தாராம். பாபா அதை அவருக்கே திருப்பி தந்து பூஜை செய்யச் சொன்னாராம். அந்த வீட்டிற்குச் சென்று அந்த விநாயகரைப் பார்த்தோம். பிறகு கடைகளில் அவரவர்களுக்கு தேவையான பொருட்களை வாங்கினோம். புறப்பட்டு வழியில் மரத்தடியில் சாப்பிட்டுவிட்டு மாலை 5.30 மணிக்கு பைத்தான் வந்தடைந்தோம். அரசு வேம்பு உள்ள மரத்தடி ஹனுமார்கோவிலில் மதிய உணவுக்குப்பின் சிறிய பஜனை செய்துவிட்டு கிளம்பினோம்.

பைத்தானில் தேநீர் அருந்திவிட்டு முகம் கைகால் அலம்பிக்கொண்டு சாதுரமநாதர் கோவிலுக்குச் சென்றோம். ஏகநாதர் சமாதியை தரிசித்தோம். சந்தி ஞானேஸ்வரர், ஏகநாதர், துக்காராம் ஆகியவர்கள் சிலைகள் உள்ளன. கோயிலுக்கு பின்புறம் கோதாவரி நதி ஓடுகிறது. இரவு 7.30 மணிக்கு ப்ருந்தாவனத்தில் இசைபாடும் நீரூற்றுகள் பார்த்தோம். பதினைந்து நிமிஷங்கள் பார்த்துவிட்டு திரும்பி குருந்தாடுஹி சம்ஸ்தானில் தங்கி 9.30 மணிக்கு உணவருந்தி தூங்கினோம்.

12ம் தேதி காலை 4.30 மணிக்கு குளித்துவிட்டு அருகில் விட்டல் சந்நிதியில் பஜனை செய்தோம். ஏகநாதர் வசித்த வீடு ஒரு கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது. அவர் பூஜை செய்த பாண்டுரங்க விட்டலர் மூர்த்தி இருக்கிறது. நாங்கள் சென்ற சமயம் பூஜை நடந்து கொண்டு இருந்தது அந்தவீட்டில் இப்போது வசிப்பவர்கள் 12வது தலைமுறையினரான கர்நாடகா காரர்கள். பின் இட்லி சாம்பார் சாப்பிட்டுவிட்டு 9.30 மணிக்கு எல்லோரா செல்வதற்காக புறப்பட்டோம். போகும் வழியில் ஔரங்கசீப் வெற்றி கண்ட ஆனால் சிவாஜி கட்டிய தவளகிரி அல்லது தௌலதாபாத் கோட்டைகள் சிலவற்றை பார்த்தோம். நேராக ஔரங்காபாத்திலிருந்து 28 கி.மீ. தூரத்திலுள்ள க்ருஷ்ணேச்வரம் போய் பன்னிரண்டு ஜோதிர் லிங்கத்தில் ஒன்றான க்ருஷ்ணேச்வரரை தரிசனம் செய்துவிட்டு வந்தோம். கோயிலை அடுத்து சிவாலயா ஏரி ஒரு குளம் போன்று இப்பொழுது இருக்கிறது. 8 சிறிய மண்டபங்களும் சிறு கோபுரத்துடனும், குளத்தின் நான்கு புறமும் சுமார் 30 படிக்கட்டுகளும் நிறைந்த கரைகளை உடையதாக உள்ளது. தினமும் 108களிமண் சிவலிங்கம் செய்து பூஜித்து

ANo:- 28520

குளத்தில் விட்டு வழிபட்ட க்ருஷ்ணா என்ற பக்தையின் புகழை மெச்சி ப்ரஸன்னமான சிவலிங்கம் கொல்லப்பட்ட மகனையும் உயிர்பித்துக் கொடுத்து, பக்தையின் வேண்டுகோளுக்கிணங்கி அங்கேயே தங்கி விட்டதாக வரலாறு இருக்கிறது. இங்கு அத்தி, அரசு, வேம்பு மூன்றும் சேர்ந்து ஸ்தல விருட்சமாக உள்ளன.

12.40 மணிக்கு அடுத்து எல்லோரா குகைகளுக்குச் சென்றோம். இங்கே இந்திய கலையும், நிர்மாண வேலைப்பாடும் ப்ரமாதம். இந்து, புத்த மற்றும் ஜைன கற்பனைக் காவியங்கள், சிற்பங்கள் மற்றும் ஓவியங்கள் மூலம் மறவாத படைப்பை பெற்றுள்ளன. குன்றுகளில் குடைந்து செதுக்கப்பட்ட குகைகள் சிறப்பானவை. இங்கு தரையில் பள்ளமான ஓரிடத்தில் நீரை நிரப்பி, அதில் சூரிய ஒளியை பளபளப்பான பொருளைக் கொண்டு விழச் செய்து அது பிரதிபிம்பமாக அவற்றில் விழச் செய்து அந்த பிரதிபிம்பம் ஒளியில் கட்டிட நிர்மாண குடைவு வேலையையும், சிற்பங்கள் செதுக்கும் வேலையையும் செய்துள்ளனர். சில குகைகள் 450 வருஷங்களில் இடைவெளியில்லாமல் தொடர்ந்து உருவாக்கப்பட்டவை. இங்கு மொத்தம் 34 குகைகள் உள்ளன. அவற்றில் 13 பௌத்த காவியங்களையும், 16 இந்து காட்சிகளையும், 5 குகைகள் ஜைன நிகழ்ச்சிகளையும் விவரிக்கக்கூடியன. குகை எண் 29ல் சிவனின் திருமணக்காட்சிகள் உள்ளன. இது 13ம் நூற்றாண்டில் முடிந்தது. 32 எண்ணுள்ள குகைகள் ஜைனதிரும்பரர் வரலாறு கொண்டவை. 16ம் எண்ணுள்ள குகையில் ஒரே குன்றில் செதுக்கப்பட்ட கைலாய காட்சியுடைய இந்து குகை உலக அதிசயங்களில் ஒன்றாகும். மஹாவிஷ்ணுவின் பல அவதாரங்கள், நடராஜர் சிலைகள் சுவர் சிற்பங்களாக பாதி கணத்திற்கு நீட்டிக்கொண்டு உருவாக்கப் பட்டவைகளாவன. ஒரு இடத்தில் சிவலிங்கத்தின் ஆவுடையார் சதுர வடிவத்தில் உருவாக்கப்பட்டிருந்தன. கூம்பான, சதுரமான வடிவுடைய கோபுரமுடைய கோயில்களும் குடையப்பட்டு சிற்பங்களால் எல்லா பக்கங்களிலும் நிறைந்திருந்தன். மற்ற வெட்டப்பட்ட வேண்டாத பாறை கற்கள் அகற்றப்பட்டு தூரத்தில் எறியப்பட்டிருந்தன.

எல்லோரா குகைகளை பார்த்துவிட்டு 3.30 மணிக்கு வழியில் இருந்த ஒரு பெட்ரோல் பங்க் அருகே உணவு சாப்பிட்டுவிட்டு கிளம்பினோம். பைத்தான் அருகே வழியில் ஏகநாதர் அண்ணன், தாத்தாவின் ஜீவசமாதி மற்றும் எருமைமாட்டை வேதம் சொல்லச் சொன்ன இடம் ஆகியவைகளையும், சுவற்றில் எழுதப்பட்ட ஓவியக் காட்சிகளையும் பார்த்துவிட்டு மாலை 6 மணிக்கு கிளம்பி இரவு 11.30 மணிக்கு பர்லி வந்தடைந்தோம். 12 மணிக்கு பால் குடித்துவிட்டு தூங்கினோம்.

செப்டம்பர் 13ம் தேதி காலை 5.15க்கு எழுந்து ஸ்நானம் செய்துவிட்டு தங்கிய இடத்தின் முன்னால் ஒரு பஜனை மடம்போல் ஒரு சின்ன கோயில் இருந்தது. அங்கே சிவபெருமானை தரிசித்துவிட்டு பர்லி வைத்யநாதர் ஆலயம் சென்று பன்னிரண்டு ஜ்யோதிர்லிங்கங்களில் ஒன்றான வைத்யநாதரை தரிசித்தோம். உயர்ந்த இடத்தில் கோயில்

சுமார் 50 படிகள் ஏறிச்செல்லும் அளவிற்கு அமைந்துள்ளது. இங்கு நாங்கள் சென்ற சமயம் அபிஷேகம் நடைபெற்றதால் அதை தரிசித்துவிட்டு வந்தோம். பக்கவாட்டில் பார்வதி அம்மன் இருந்தது. லிங்கத்தின்மேலே 6 செம்புகள் மெல்லிய துவாரங்களுடன் தொங்கிக் கொண்டிருந்தன. துவாரங்களின் வழியாக லிங்கத்தின் மேல் நீர் சொட்டிக்கொண்டிருந்தது. திரும்பி 8.15க்கு டிபன் சாப்பிட்டுவிட்டு 9.20க்கு புறப்பட்டோம்.

வழியில் கோராகும்பர் இருந்த இடமான தோடகிபுத்தை அடைந்தோம். இவர் ஒரு தீவிர விட்ட்ல பக்தர். சதாகாலமும் நாமஜபத்தில் ஈடுபட்டு தன்னை மறந்த நிலையில் மண்குழைத்து பானை செய்யும் தொழில் செய்து வருவார். ஒருநாள் அவ்வாறு மண்ணை மிதித்து குழைக்கும்போது, அவர்கள் குழந்தை தவழ்ந்து மண்ணருகில் வர, விட்டலரின் நினைவில் ஒன்றிய கோராகும்பர் அதையும் சேர்த்து மிதித்துவிடுகிறார். குழந்தை இறந்த பின் கொதித்தெழுந்த மனைவி என்னை தொடக்கூடாது என்று சத்தியம் செய்ய, அதற்காக வருந்தி, பிறகு தன் தங்கையையே மணம் செய்து வைக்கிறாள். கோராகும்பர் மாமனார் தன் பெண்களிருவரையும் சமமாக நடத்த வேண்டுகிறார். இவ்வார்த்தைகள் காரணமாக கோராகும்பர் வைராக்யம் அதிகரிக்கிறது. அவரை எப்படியேனும் வசப்படுத்த வேண்டுமென்று இரவில் கோரா குமப்பரது கரங்களை மனைவியர் பற்ற, பாண்டுரங்கள் மீது ஆணை என்று சீறியவர் கத்தியால் தமது கைகளை வெட்டிக்கொள்கிறார். சகோதரர் அரை குறையாய் வெட்டுண்டிருந்த கைகளை கட்டிவைக்கவே காயம் ஆறினாலும் கை ஊனமாகவே இருந்தது. சகோதரர் கோரா குடும்பத்துடன் பண்டரீபுரம் வந்து பந்தலில் பஜனை செய்யத் தொடங்கினார். தாளம் போட ஆரம்பித்தார் கோரா மெய்மறந்து பஜனையில் ஈடுபட்டு அப்பொழுது கைகள் முன்பு இருந்ததுபோல நன்றாக ஆகிவிட்டன. யாவரும் வியப்பில் ஆழ்ந்திடவே, கோராவின் முதல் மனைவி தன் குழந்தையையும் மீட்டுத்தர பகவானிடம் மணமுருகி கதறி அழுது வேண்ட, இறைவன் திருவருளால் பாண்டுரங்கனது மூலஸ்தானத்திலிருந்து 'அம்மா' என்ற குரலுடன் அக்குழந்தை வெளிவந்தது. என்னே இறைவன் திருவிளையாடல். கோராகும்பர் குழந்தையை தவறுதலாக கொன்று விட்டமையால் பிசைந்த மண்ணை தோஷம் என்று ஆற்றில் போட்டுவிட்டாராம்; ஆனால் அது ஒவ்வொரு செங்கல்லாக மேலே மிதந்து வந்ததாம். கனமே இல்லாத அந்த செங்கல்லை எங்கள் தலைமீது வைத்து ஆசிகூறினார்கள் அவ்வூர் பக்தர்கள். நாங்களும் கையில் வாங்கிப்பார்த்தோம், வாளி தண்ணீரில் முழுகவைத்து பார்த்தோம், ஆனால் செங்கல் மிதந்தது.

2.30க்கு சாப்பிட்டுவிட்டு இங்கிருந்து ஷோலாபூர் போகும் வழியில் துல்ஜாபூர் என்ற இடத்தில் பவானி கோயிலை தரிசித்தோம். பவானியம்மன் மஹாராஷ்ட்ர மக்களின் 'காளி' அளவுக்கு மரியாதைக்கும் முக்கியத்திற்கும் பாத்திரமான அம்மன் ஆவார். இங்கு

அம்மன் முகம் சற்று வித்தியாசமாக மேல்நெற்றி பாகத்தில் விரிந்தும், கீழ்தாடைப் பக்கத்தில் குவிந்த மாதிரி முக்கோண வடிவத்தில் இருந்தது. இங்கு அம்மனுக்கு பச்சைநிற வளையல்களை வைத்து படைப்பது பிரசித்தம் போலும். கடைகளிலும் ஒரேபச்சை நிறவளையல்கள் குவிந்து இருந்தன. இங்கிருந்து 3.30க்கு கிளம்பி ஷோலாபூரில் நாங்கள் புறப்பட்ட இடத்திற்கு ஐந்து மணியளவில் வந்து சேர்ந்தோம். தேநீர் அருந்திவிட்டு எல்லோரும் கடைகளுக்குச் சென்றோம். அங்கு அவரவர்களுக்கு தேவைப்பட்ட படுக்கை விரிப்புகள், செருப்புகள், டீதூள், சிக்கி, பெருங்காயம் ஆகியவை வாங்கிக் கொண்டோம். எங்களை வரவேற்ற திரு.தேஷ்முக் எல்லா இடங்களுக்கும் சேர்ந்தே வந்தார். சிவாஜி உட்கார்ந்திருந்த சபாமண்டபம் பார்த்துவிட்டு சித்தேஸ்வரர் ஆலயம் பார்க்கச் சென்றோம்.

சித்தேஸ்வரர், ராமேஸ்வரர் கோயில் ஒரு பெரிய குளத்தின் நடுவே உள்ளது. சாது சித்தேஸ்வரரின் சமாதி அங்கே அமைக்கப்பட்டுள்ளது. குளத்தின் இன்னொரு பகுதியில் சித்தேஸ்வரர் சிவன் கோயில் உள்ளது. ஈஸ்வரனுக்கு ஸ்வர்ண கவசமும் நந்திபெருமானுக்கு வெள்ளி கவசமும் சாத்தப்பட்டிருந்தது. சிவன் கோயில் வாயில் வெள்ளிதகட்டினால் போர்த்தப்பட்டிருந்தது. பரமேஸ்வரர், சோமேஸ்வரர் வெளியில் உள்ளனர். அங்கிருந்து திரு. தேஷ்முக் தன் வீட்டிற்கு அழைத்துப்போனார். அங்கு அவரே எங்களுக்கு முதலில் குடிப்பதற்கு நீரும், பிறகு பாதாம் பாலும் கொடுத்தார். ஸ்வாமி சின்மயானந்தரின் படம் எங்கள் முன் வைக்கப்பட்டது. நாங்கள் ராமகிருஷ்ணர், புரந்தரதாஸர் பாடல்கள், பகவத் கீதையின் தியானஸ்லோகம் ஆகியவைகள் பாடி ஒரு சிறிய பஜனை செய்தோம். அவர் வீட்டின் கீழ்பகுதியில் ஒரு ஆஸ்பத்திரி நடத்துகிறார். அதில் அவருடைய மகன், மருமகள் இருவரும் டாக்டர்களாம். அவருடைய வயதான அம்மா ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவரிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டோம். அருகில் திரு.தேஷ்முக் ட்ரஸ்டியாக இருக்கும் விநாயகர் கோயிலையும் காட்டினார். பிறகு விடைபெற்றுக்கொண்டு, நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கு திரும்பிவந்து சாப்பிட்டு படுத்து தூங்கினோம்.

14ந்தேதி காலை எழுந்து குளித்துவிட்டு காலை 6.30க்கு டிபன் முடித்து சாமான்களை அடுக்கி, 7மணிக்கு பஸ்ஸில் ஏற்றி ரயிலடிக்கு வந்து சேர்ந்தோம். ட்ராலி மற்றும் கூலியாட்கள் மூலமாக இரண்டாவது நடைமேடைக்கு வந்தோம். வண்டி புறப்பட சில நிமிஷங்கள் இருக்கும் வேளையில் திரு. தேஷ்முக் அவர்களே விடைகொடுத்து வழியனுப்பவும் வந்தார். என்னே அவரின் பெருந்தன்மை! லோகமான்யதிலக் - மதுரை எக்ஸ்பிரஸ் 9 மணிக்கு புறப்பட்டது. நாங்கள் ரயிலில் மாலை 6 மணியளவில் லலிதா ஸஹஸ்ரநாமத்துடன் நாமாவளிகளும் பாடி பஜனை செய்து ஆரத்தி செய்தோம். வழிப்பயணத்தில் உணவுக்காக சப்பாத்தி, உருளைக்கிழங்கு, தயிர்சாதம் ஊறுகாய் பொட்டலங்கள்

தங்குமிடத்திலிருந்து தயாரித்து கொண்டுவந்திருந்தது பயன்பட்டது. 15ம்தேதி காலை 6 மணியளவில் சிவபுராணம், ஸ்ரீராமகிருஷ்ண அஷ்டோத்ரம், நாமாவளிகள் பாடி பஜனை செய்தோம். ஒன்பது மணிக்கு திருச்சிராப்பள்ளியை ரயில் வண்டி வந்தடையவே யாத்திரை கூட்டாளிகள் பிரியாவிடை பெற்றோம்.

மஹாராஷ்ட்ராவில் இத்தனை இடங்களைப் பார்த்தபோது தெய்வபக்தியும் ஆன்ம சிந்தனையும் அனேகரிடம் காணமுடிந்தது. ஆலயகோபுரங்கள் பொற்கலசங்கள் மக்கள் தலைகளை தாமாக தாழவைக்கின்றன. கைகளை குவிய வைக்கின்றன. ஜெயவிட்டல், பாண்டுரங்க விட்டல என்ற கோஷங்கள் கேட்கின்றன. ஒரு முருகன் சந்நிதி கூட இல்லை. எல்லா கோயில்களும் விநாயகர், தத்தாத்ரேயர், ஆஞ்சனேயர் சந்நிதிகள் தான் இருக்கின்றன. தவிர தமிழ்நாட்டு கோயில்களில் இருப்பது போல் பலிபீடம், கொடிமரம் பார்ப்பது அரிது. ஆனால் ஒவ்வொரு கோயிலும் ஆமை உருவத்தை பதித்திருக்கிறார்கள். அதாவது ஆமை தன் உறுப்புகளை உள்ளே இழுத்துக் கொள்வது போல ஒருவன் தன் ஐம்பொறிகளையும் ஒரு பிறப்பில் அடக்குவான் எனில் அவனை மற்ற ஏழு பிறப்புகளிலும் தீமையில்லாமல் பாதுகாக்கும் என்ற வள்ளுவன் வாக்கினை குறிப்பதாக இருக்கலாம். உயர்ந்த பண்புகள் வளர்க்க முயற்சி செய்வோமாக. மராத்தியர்கள் மொழிப்பற்று மிககவர்கள் போலும். வேறு எந்த மொழியும் பேசுவதில்லை. இங்கு பெண்கள் எல்லோரும் பெரும்பாலும் புடவை உடுத்தி நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு வைத்துள்ளார்கள். எங்களுக்கு ஏற்பட்ட மொழிப்பிரச்சினை தீர ஹிந்தி மொழி தெரிந்த சுலோசனாவும், சந்தான கிருஷ்ணனும், கன்னட மொழி தெரிந்த அனுசுயாவும், மைதிலியும் அளவளாவி தீர்த்தனர்.

மொத்தத்தில் பண்டரீபுரம் விட்டலர் மற்றும் ஷீரிடி சாய்பாபா சேவை சிறப்பானவை. ஜோதிர் லிங்கங்களில் 12ல் ஐந்தும், அஷ்ட வினாயகர்களில் 8ல் நான்கும் தரிசித்தோம். மஹார்ராஷ்டிர மாநிலம் பூராவும் வேன் பயணம் கஷ்டமில்லாதிருந்தது. உணவுக்காக நாங்கள் தேடிப்போகவில்லை. தானே இருக்குமிடத்தில் கிடைத்தது. தங்கும் வசதி தர்மசாலை, பயணிகள் விடுதி, பக்தநிவிஸ் ஆகியவற்றில் குறைந்த செலவில் அமைந்தது. ஷோலாபூர் சின்மயாமிஷன் காரியதரிசி அனுப்பி வைத்த வழிகாட்டி வசதி சுலபமாகி விட்டது. புனித இடங்கள் சென்றோம். மனநிம்மதி கிடைத்து மகிழ்ச்சியாயிருந்தது. யாத்திரை அனைவருக்கும் பிடித்திருந்தது.

இறைவனருளால் எங்கள் யாத்திரை நன்றாகவே நடைபெற்றது. அடுத்த யாத்திரை தொடர இறையருள் வேண்டும்.

இணைப்பு - ஞானேஸ்வரர்

இவர் நூல் 'ஞானேஸ்வரி' பகவத் கீதையை ஒட்டியது. ஆனந்தீயில் இவரது சமாதியும் பாண்டுரங்கனது ஆலயமும் இருக்கின்றன.

ஞானேஸ்வரரின் தந்தை விட்டோபா ஒரு சமயம் காசி யாத்திரைக்கு புறப்படுகிறார். வழியில் சீதோபந்து என்பவர் வீட்டில் விருந்தினராக செல்கிறார். அவர் கனவில் இறைவன் தோன்றி ஞானேஸ்வரரை சீதோபந்து மகள் ருக்மா பாயை மனைவியாக ஏற்கச் சொல்கிறார். ஆனால் காசியாத்திரைக்கு பின்புதான் திருமணம் என்றிருந்த விட்டோபாவுக்கு கோபம் வருகிறது. கடைசியில் பகவான் அசரீரிக்கு மேல் விவாதம் செய்ய விரும்பாமல் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளவே திருமணம் நடக்கிறது. பின் பெற்றோர்கள் இறந்து விடவே, அவர்களின் அஸ்தியை கரைக்க வேண்டி கங்கை தேடி விட்டோபா செல்கிறார். காசியில் ஸ்ரீபாதஸ்வாமியை குருவாக அடைந்து அவரிடம் ஞானோபதேசம் பெறுகிறார்.

ஸ்ரீ பாத ஸ்வாமி யாத்திரையாய் அலங்காவதி வந்து சேர்கிறார். நெடுநாள் வரை காசி சென்ற கணவன் வராததால் கவலை கொண்ட ருக்மாபாய் ஸ்ரீ பாதஸ்வாமியை வணங்கிய போது, அவர் "நான்கு மக்கள் உண்டாகுக" என்று ஆசிர்வதிக்கிறார். ஆச்சரியம் அடைந்த ருக்மா பாய் தன் முழு வரலாற்றையும், சொல்ல, ஸ்ரீ பாதஸ்வாமி பொறுமையாக கேட்டுவிட்டு தன் வாக்கு பொய்த்ததில்லை என்று மட்டும் சொல்லிவிட்டுப் போய் விடுகிறார். காசி திரும்பிய குரு தன் சீடனை இல்லறம் புக வைக்கிறார். தன் தவப்பலன்களை அளிப்பதாகச் சொல்லவே விட்டோபா ருக்மாபாயுடன் இல்லறத்தில் ஈடுபடுகிறார். நான்கு மக்கள் நிவ்ருத்திநாத், ஞானேஸ்வரர், ஸோபானதேவர், முக்தாபாய் என்று தோன்றுகின்றனர்.

ஊரில் சந்நியாசியாகி சம்சாரியானவன் குழந்தைகளுடன் சமபந்தி போஜனமா என்று அந்தணர்களுக்கும் விட்டோபாவின் குழந்தை களுக்கும் ஒரு வீட்டு சமாராதனை நடந்த சமயத்தில் விவாதம் வாய் பேச்சில் ஆரம்பித்து அடிதடியில் முடிந்தது. ஞானேஸ்வரர், தந்தையைப் பற்றி குறிப்பிட்டு, ப்ரம்மஞானி மீண்டும் வந்தால் பிரஷ்டன என்று வாதிடுகிறார். அடிப்பட்ட அந்தணர்கள் அரசனிடம் சென்று முறையிட்டு விளக்கம் கேட்கும் போது, அரசன் பிறப்பு என்பது நலம் தராது. இந்த வீண் சண்டை பொறாமையினாலும், வீண்பழியாலும் எழுந்த சண்டையே. உண்மையை அடையவே மந்திரங்கள் வழி வகுக்கின்றன. கருத்தை உணராத நீங்கள் வெறுமனே கத்துகிறீர்கள் என்றார். செயலினால் தான் உயர்வடைய முடியும் என்றார்.

வேத வேதாந்த தத்துவங்களும், யோக சாதனைகளின் வழிகளும், அவற்றால் அடையும் பயனும் கூறி ஞானேஸ்வரர், தன் தந்தையை தேற்றினார். மீண்டும் காட்டினின்றும் வீட்டில் புகுந்தார் விட்டோபா. அதுகாறும் தமது தவத்தினாலும், ஞானத்தினாலும், யோகத்தினாலும் பெற்ற இனிய அனுபவங்களையெல்லாம் பிறருக்கு எடுத்துரைத்து போதிக்க முயன்றார் அவர். விட்டோபா தெய்வதிரு நெறியை பரப்ப முற்பட்டார். தம் குழந்தைகளை மீண்டும் இச்சமூகத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என வேண்டி, புரோகிதர்கள் குருமார்கள் விதித்தபடி

த்ரிவேணியில் நீரோட்டத்திலே வீழ்ந்து விட்டோபா தம்மையே மாய்த்துக்கொண்டார். தங்களை மீண்டும் ஜாதியில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று நாலு குழந்தைகளும் வைதிகர்களிடம் சென்று கோரினபோது, ஞானதேவரின் வாதத்திறமையை மறுத்துக் கூற முடியாது போனாலும் அவர்கள் நீங்கள் நாலுபேரும் தூய்மையாக வாழ்ந்து வருகிறீர்கள் என்பதற்கு அத்தாட்சி காட்டமுடியுமா? உன் ஆற்றலைக்காட்டு, பார்ப்போம் என்றனர். ஞானதேவர் என்ன கேட்டாலும் செய்வேன் பகவான் அருளால், என்றார். அவர்கள் அப்போது பக்கத்தில் போய்க்கொண்டிருந்த எருமைக் கடாவை காட்டி, இந்த எருமை மாடு வேதம் ஓதும்படி நீ செய்வாயா? என்றார்கள். அவரும் அந்த எருமைக்கடாவைத் தட்டிக்கொடுத்து அது வேதம் ஓதும்படி செய்து காட்டினாராம்.

ஞானதேவர், மனிதர்கள் பிறப்பினால் உயர்ந்தவர்களா, செயலினால் உயர்ந்தவர்களா என்று எருமையைப் பார்த்து விளக்கம் கேட்டார். அதற்கு அந்த எருமை வாய் திறந்து மனித பாதையிலே மறைகளின் சாரம் சொல்லி கடைசியில் பிறவியில் சூத்ரனாக பிறந்தாலும், கர்மானுஷ்டானங்களால் ப்ராஹ்மணனாகி விடுகிறான். பிரஹ்மத்தை உணர்தலே முக்கியம் என்று சொன்னது. கூடியிருந்த உத்தமர்கள் திகைத்துப்போய் வணங்க முற்பட்டனர். ஞானேஸ்வரரை ஆதரித்தவர்கள் வீட்டிற்கு பித்ரு காரியங்களுக்கு வரமுடியாதென மறுத்தனர் மற்றவர். ஞானேஸ்வரர் பித்ரு தேவதைகளையே வந்து உண்ணும்படி செய்தார். ஞானேஸ்வரர் தம்மை அணுகியவரையெல்லாம் பத்தராக்கினார். அனைவருக்கும் உபதேசங்கள் செய்தார். பிறகு தாம் ஒரு நாள் தியானத்தில் அமர்ந்து அப்படியே மகாசமாதியில் இருந்து விடுவதாகவும், தம் மீது செங்கற்களை அடுக்கி சமாதி கட்டவேண்டும் என்றும் சொன்னார். சீடர்கள் மறுத்தும் தியான நிலையிலேயே மகா சமாதி அடைந்தார் ஞானேசுவரர்.

ஸ்ரீ துக்காராம்

மஹாராஷ்ட்ர தேசத்தில் தெய்வபக்தியைப் பரவச் செய்தவர்களுள் துக்காரம் ஒருவர். இவர் நாமதேவருடைய மறுபிறப்பே என்று சொல்லப்படுகிறது. *நாமதேவர் சரீரத்தைவிட* நேரவே, அவர் பாட விரும்பிய பலலக்ஷம் பாடல்களை பூர்த்தி செய்ய தோன்றியவர் என்று சொல்லப்படுகிறது. தேவூரில் பிறந்தார். விவாகமே வேண்டாமென்ற துக்காராமிற்கு அழகிலும் அறிவிலும் சிறந்த இரு பெண்களை மணமுடித்தனர். முதல் மனைவிக்கு இருபிள்ளை குழந்தைகள். சில காலம் சென்று முதல் மனைவி இறந்து போகவே இளைய மனைவி கமலாவுடன் தேவூர் வாழ்க்கை நடத்தி வந்தார். துக்காராம் பொதிமாடுகளின் மேல் தானியங்களை ஏற்றி ஊர் ஊராய்ச் சென்று விற்றுப் பொருள் ஈட்டினார். லாபம் கிடைத்து குடும்பம் செழித்த சமயத்தில் தேவூரில் பண்டரீநாதனுக்கு ஒரு ஆலயம் கட்டுவித்தார்.

நாட்டில் பஞ்சம் வரவே, விற்கப்போவதுபோல் பொதி எருதுகளுடன் சென்று எல்லாவற்றையும் ஏழை எளியவர்களுக்கு விநியோகம் செய்து வருவார் துர்க்காராம். இது என்ன கைங்கர்யம் என்று வீட்டிலுள்ளோர் சண்டையிட்டனர். பாண்டுரங்கன் சோறு போடுகிறானா என்று ஏசிப்பேசிவிட்டு இளைய மனைவி கமலா தெரிந்த மார்வாடியிடம் நூறு வராகன் கடன் பெற்று வந்தாள். வீட்டு கடமைக்காக, கடையில் சாமான்கள் வாங்கி, பொதிமாடுகளுடன் விற்றுவர துக்காராம் கிளம்பினார். மாடுகளை ஓட்டிய வண்ணம் வந்து கொண்டிருக்கையில் வானம் கருத்து இடிமின்னலுடன் மழை பொழியலாயிற்று. தானிய மூட்டைகளுடன் மாடுகளை ஒரு மரத்தடியில் நிறுத்திவிட்டு தானும் மரத்திலேறி பகவத் பஜனையிலே துக்காராம் தன்னையும் மறந்தார். மாடுகளை புலி அடித்துபோய்விட்டது. தானிய மூட்டைகள் சிதறித் தண்ணீரோடு போயிருந்தன.

இப்படியே வீடு திரும்பினால் கமலா என்ன சொல்வாளோ என்றெண்ணி காட்டிலேயே இருந்து விடுவோம் என்று துக்காராம் உட்கார்ந்துவிட்டார். இங்கே இவர் த்யானத்திலிருக்க, அங்கே லாபத்துடன் வீடு திரும்பினார். மற்றொரு துக்காராம் 140 வராகன் கொடுத்து, நீராடி வரச்சென்றார். ஆச்சரியத்துடன் கடன் திருப்பித்தர மார்வாடி வீடு போனாள் இளையமனைவி, மார்வாடியோ, கணவர் வ்ட்டி முதலுடன் செலுத்தி ரசீது பெற்றுப் போனார் இப்பொழுதுதான் என்றார். திகைத்துப்போன கமலா வீடு திரும்பவே, கணவன் வெகு நேரம் வராததால் காட்டிற்கு துக்காராமை தேடிப்போனாள். அங்கே கணவரைக்கண்டு அவர் வந்ததையும் பணம் கொடுத்ததையும் சொன்னாள். ஆனால் துக்காவோ, தன்னைப்போல் வந்தது பாண்டுரங்கனே என்று வியப்புடன் கூறினார். தாம் புறப்பட்டது முதல் நடந்தவைகளை துக்காராம் சொல்லி முடித்தார். இதைக்கேட்ட கமலாபாயிடம் அன்பும் பக்தியும் பெருகலாயிற்று. துக்கா வீட்டிற்கு வர இசையாததால், தினமும் கமலா காட்டிற்கு உணவு கொண்டு வந்து கொடுக்கிறாள். இரண்டு ஆண்டுகள் இப்படி தள்ளிவிட்டு மெய்சிலித்துப்போன கமலாவின் வற்புறுத்தலின் காரணமாக துக்கா மீண்டும் வீடு வந்து சேர்ந்தார்.

புன்செய்தானியங்கள் பயிர்செய்யும் ஒரு விவசாயியினுடைய தோட்ட காவளாளியாய் துக்காராம் வேலைசெய்ய ஒப்புக்கொண்டார். சோளமும், கம்பும், தினையும் கதிர்களுடன் நிறைந்திருந்தவை பறவை தின்னாமல் கவண் வீசி கல் எறிய வேண்டிய வேலை அது. பறவைகள் கூட்டம் பார்த்து இளகிய மனம் கொண்டு வியந்து மெய்மறந்து துக்கா பாடுகிறார். ஒருநாள் கதிர்களை பறவைகள் தின்றுவிட்டு பறந்ததை விவசாயி பார்த்து கோபம் கொண்டு துக்காவை அடிக்க விரும்பினார். உடன் இருந்த மற்றொரு விவசாயி தடுக்கவே கோபம் தணிந்தது. சென்ற வருஷத்தைவிட அறுவடை குறைந்தால் வற்புறுத்தி வாங்குவோம் என்று அவர் கூறுகிறார். ஆச்சரியவசமாக அதிகம்

தானியம் அறுவடையானது. மனம் பூரித்த விவசாயி மன்னிப்பு கேட்டுவிட்டு, தானியத்தில் ஒரு பகுதியை கொடுத்தார். ஆனால் துக்காராமோ அதை ஏழை எளியவர்களுக்கு கொடுத்தார்.

ஒரு பௌர்ணமி இரவு துக்காராம் கனவில் கண்ணன் தோன்றி, 'நாமதேவனாக இருந்தபோது பாடாமல் மிச்சம் வைத்திருந்த பாடல்களை பாடிமுடிக்க', கேட்டார். அன்று முதல் அவர் அருமையான கவிதைகள் பாடினார். தேவூர் மக்கள் அவைகளை மனப்பாடம் செய்து பஜனைகளில் பாடி இறைவனைத் துதித்தனர். பண்டரீபுரம் சென்று கோவிலிலே அபங்கங்களை விரும்பி பாடச் சென்றார் துக்காராம். அரசர் சிவாஜி ஓர் எளிய பக்தன் வேஷம் பூண்டு பஜனை கேட்டார். சிவாஜி பண்டரீபுரம் வந்த செய்தி அறிந்த ஔரங்கசீப் சமயத்தை பயன்படுத்தி சிவாஜியை சிறைப்படுத்த முற்றுகையிட்டான். பகைவர்களால் சிவாஜிக்கு தீங்கு வராமல் காக்கவேண்டும் என்று வேண்டலானார். துக்காராம் பண்டரீநாதன் தாமே சிவாஜிவடிவமெடுத்து குதிரை மீதேறி ஓடினான். படை பின் தொடரவே, காட்டிலும் மேட்டிலும் இழுத்தடித்து பின் மறைந்து போனான். துரத்திய படையோ மாண்டது. செய்தி கேட்டு திகைப்படைந்த உண்மையான சிவாஜி அரசன், பாண்டுரங்கன் புரிந்த விந்தையை நினைத்து பூரித்தார். பிறகு துக்காராம் வறுமையை நீக்க தானே ஒரு வியாபாரிபோல் வந்து தானிய மூட்டைகளை அளித்துச் சென்றார். துக்காராம் பொருட்களை பக்தர்களுக்கு விநியோகம் செய்தார்.

துக்காராம் ஸ்வாமிகள் பக்திப் பாடல்களைக் கேட்டு பித்துபிடித்து குடும்ப பொறுப்பு கவனியாமல் போய்விட்ட ஒரு குடியானவனின் குழந்தை எதிர்பாராத விதமாக இறந்துவிட்டது. அவன் மனைவி துக்காராமிடம் வந்து, 'உங்களால்தான் பித்தம் தலைக்கேறிய என் கணவன் கவனியாததால் குழந்தை போய்விட்டது. அதற்கு நீர் பொறுப்பாளி' என்று கதறினாள். துக்கா பாண்டுரங்கனிடம் முறையிடவே, இறைவன் அருள்புரியவே, குழந்தை மீண்டும் உயிர் பெற்றெழுந்தது. இது ஒரு ஊர் கண்டு வியந்த அற்புதம்.

ஒரு ஏகாதசியன்று கமலா தன் புடவையை புழக்கடையிலே உலரவைத்து வேலை செய்யச் சென்றாள். ஒரு ஏழைப்பெண் துக்காராமிடம் கந்தைத் துணிவேண்டி கெஞ்ச, அவர் காய்ந்து கொண்டிருந்த புடவையை எடுத்க் கொள்ளச்சொன்னார். கமலா பாய்க்கு தெருக்கோடியில் ஒரு ஹரிஜனப் பெண் தன் புடவையுடன் செல்வது தெரிந்தது. ஓடிப்போய் விவரம் கேட்க அவள் துக்காராம்தான் கொடுத்தார் என்றாள். கணவன் மீது ஏற்பட்ட கோபம் பாண்டுரங்கள் மீது திரும்பியது. பாண்டுரங்கன் திருவடியை அம்மிக்குழவியால் நசுக்கு என்று கோவிலை நோக்கி ஓடினாள் கமலா. துக்காராம் தடுத்தார். திமிறிக் கொண்டு ஓடி கோயிலுக்குள் நுழைந்துவிட்டாள் கமலாபாய். கமலாபாயின் எதிரே புன்னகையுடன் ருக்மணி தேவி நின்றாள். ருக்மணியின் இடையிலே கமலாபாயின் பழைய புடவை காட்சி தந்தது.

கமலா இறைவன் சோதனையை உணர்ந்து, கரம் குவித்து, 'பாண்டுரங்கன் பெருமையை உணரவில்லையே' என்று வெட்கி நின்றாள். தெரியாமல் செய்த பிழைகளை மன்னிக்கவேண்டும் என்று கதறிவிட்டு கமலா வெளியே வந்தாள். அவள் தனது உடலிலே ஆபரணங்களும் பட்டாடையும் இருக்கக் கண்டு திகைத்தாள். இவளது மாறுதலைக் கண்ட துக்காராம் கூடதிகைத்தார். 'பாக்கியவதியான நீ இறைவனிடம் முக்தி கேட்காமல் அறப்பொருளை கேட்டு பெற்று வந்தாய்' என்றார். கமலா மோட்சம் தனக்கு எதற்கு? தங்களை வழிபட்டு வணங்கி, நல்வாழ்வு வாழ்வது தான் மோட்சம் என்றாள். பாண்டுரங்கன் தினமும் ஓர் அதிதி வேடம் தரித்து துக்காவோடு அமர்ந்து உண்டும் வந்தான்.

மேலும் சில அற்புதங்களை காண்பிக்க விரும்பினான் பண்டரிநாதன். சில சமயங்களில் உருவோடு கூடிய விருந்தினனாக துக்காராமுடன் பண்டரிநாதன் விருந்து உண்டு வந்த செய்தி ஊர்பூராவும் பரவியது. சிஞ்சன் வாடி என்ற கிராமத்தில் வேதம் ஓதிய நல்லொழுக்கம் உள்ள அந்தணர் பலர் வாழ்ந்தனர். ஒரு கணேச பக்தர் தனது இஷ்ட தெய்வமாகிய விநாயகர் தன்னுடன் உட்கார்ந்து சாப்பிட துக்காராம் செய்யவேண்டும் இல்லையென்றால் பண்டரீநாதன் துக்காராமுடன் விருந்துண்பது வெறும் மோசடி என்றார். துக்காராம், 'பக்தனாகிய நீ விரும்பி அழைத்தால் விநாயகப் பெருமான் கட்டாயமாக வந்து பக்கலில் அமர்ந்து உண்பார்' என்றார். கணேச பக்தர் நெடுநேரம் அழைத்தும் விநாயகர் வரவில்லை. துக்காராம் கணபதி இப்பொழுதுதான் உள்ளே சென்றார்; கடலிலே விழுந்த ஓர் அடியாரது கப்பலை மூழ்காமல் காக்க அங்கே சென்றிருந்தார்' என்றார். கிஞ்சன் வாடி அந்தணர் அவ்வாறே ஈரம் சொட்டசொட்ட உட்கார்ந்திருந்த கணேசரைப் பார்த்தார். உள்ளே வரும்படி அந்தணர் அழைக்க வராத கணபதி துக்கார்ாம் வேண்ட உடனே விட்டலருடன் கூட வந்து அமர்ந்தார். எல்லோருக்கும் இலையில் இடப்பட்ட பொருள்கள் மறைவது மட்டும் தெரிந்தது. ஆனால் துக்ாராமுக்கு, பாண்டுரங்கரும் கணேசரும் உட்கார்ந்து இலையில் இடப்பட்டவைகளை சுவைத்து உண்பது தெரிந்தது. அந்தணர்கள், துக்காராமின் கீழ் ஜாதி பிறப்பு எண்ணத்தைவிட்டு, அவரை தெய்வமாக கொண்டாடினார்கள்.

துக்காராம் பலவகையாலும் பக்தியோகத்தை வற்புறுத்தி தனது பஜனைப் பாடல்களால் மக்களை நல்வழிப்படுத்தினார். ஒரு நாள் ஒரு வீதியிலே பஜனை செய்யும்போதே பூத உடலுடன் விமானத்தில் ஏறிச் சென்றதாக சொல்லி கேட்கிறோம். துக்காரமின் சமாதி தேஹூ ரோட் என்னுமிடத்தில் இருக்கிறது.

ஸ்ரீ சமர்த்த ராமதாஸர்

ஜான்புரி நகரில் சூர்யாஜி பண்டிதருக்கு இரண்டாவது புதல்வனாக நாராயணன் பிறந்தார். இளம் வயதில் நிறைய விஷமம் செய்பவனாக இருந்தான். நான்கு பேர் தூக்க வேண்டிய மூட்டையை ஒருவனாக தூக்கி வந்து விடுவான். நாட்கள் செல்ல செல்ல விஷமங்கள் குறைந்து

தியானம் செய்வதில் அவன் மனம் ஆழ்ந்தது. தன்னை வற்புறுத்தி திருமணம் செய்து கொள்வது நாராயணனுக்கு பிடிக்க வில்லை. திருமண நாளன்று உடை மாற்றச் சென்ற நாராயணன் காணவில்லை.

அடர்ந்த காட்டினுள்ளே புகுந்து ஒரு குகைக்குள் அமர்ந்து ராமமந்திரத்தையே தியானிப்பதில் நாராயணன் முனைந்தான். கிட்டும் காய்கனிகளைத் தின்று நீரோடையின் நீரைப் பருகி பல நாட்களாக தியானத்தில் ஆழ்ந்தும் ராமபிரான் அருள் கிடைத்து இறைவனைக காண முடியாமல் போகவே, முதற்படியாக அனுமனை வழிபட உறுதி கொண்டான் நாராயணன். அனும்ன் தோன்றவில்லையெனில் உயிர் விட்டு விட முடிவு செய்து கொண்ட இவனுடைய உறுதியைக் கண்ட அனுமன் இவன் எதிரில் தோன்றினான். தனக்கு ராமபிரானது அருள் பெற உபதேசம் வேண்டினான் நாராயணன்.

அனுமன் நாராயணனை பஞ்சவடியில் உள்ள ஸ்ரீ ராமர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்று ஸ்ரீராமநவமி யன்றைய பஜனைகளிலே ஈடுபடச் செய்தார். பக்தர்களும் அர்ச்சகர்களும் வீடு திரும்பிய பின் அனுமன் கர்ப்பகிரஹத்தில் நுழைந்து வணங்கி அன்பும் பரிவுமாக நாராயணனுக்காக ஸ்ரீராமரது உபதேசம் வேண்டினார். ராமபிரான் தோன்றி நாராயணன் தலைமீது கை வைத்து, செவியிலே ராமதாரக மந்திரத்தை உபதேசித்து ஆசி வழங்கினர். நாராயணனை பக்தியைப் பிரசாரம் செய்து நாட்டு மக்களை நல்வழிப்படுத்தச் சொன்னார். அற்புதமான ராமலக்ஷ்மண சீதாபிராட்டி காட்சி கிடைத்தது. 'ஏ ராமதாஸ்! நீ நினைக்கும் போதெல்லாம் மாருதியும் நானும் வருவோம்' என்று அருளி மறைந்தார். ராமதாஸர் சங்க்லீநகர் நோக்கி நடந்தார்.

குருவும் சீடனுமாக அனுமனும், ராமதாஸரும் ஆன இரு அந்தணர்கள் ராமபஜனை செய்து வருவது மக்களை மெய்மறக்கச் செய்தன. சில நாட்கள் கழித்து மாருதி சேதுவின் காவலுக்குச் செல்லவே ராமதாஸர் தனியர் ஆனார். பத்து வீடுகளில் பிச்சையெடுத்து பாகவதர்களுக்கும் இட்டுத்தாமும் உண்டு பகவத் பக்தியை மக்களுக்கு எடுத்துரைப்பார் ராமதாஸர். உத்தவர் என்பவர் இவருக்கு சீடரானார். சாங்க்லீ நகரிலே மிகச் சிறந்த மாருதியின் ஆலயம் ஒன்றுகட்டி, சிறந்த அழகிய விக்ரஹம் பிரதிஷ்டை செய்வித்தார்.

ராமதாஸர் மீண்டும் காடுகளிலே சென்று ராமத்தியானம் செய்யத் தொடங்கினார். கிருஷ்ணா நதியில் நீராடி மறுபடியும் மாருதியை நினைத்தார். மாருதி வந்து, 'ராமபிரான் தரிசனம் விரும்பினால் மூன்றரை கோடிமுறை ராமதாரகத்தை ஜபிக்க வேண்டும்' என்று சொல்லி மறைந்து போனார். பன்னிரண்டு வருடங்கள் காய்கனி கிழங்குகளை உண்டு தண்ணீரைப் பருகி உறுதியுடன் கோடி ராம நாமத்தை ஜபிப்பதிலே மெய்மறந்திருந்தார் ராமதாஸர். தாஸருக்கு ஸ்ரீராமபிரான் தானே வந்து தரிசனம் செய்தார்.

ஊஞ்சவிருத்தி எடுத்து வந்து சமைத்து பஜனை செய்து இறைவனுக்கு அர்ப்பணித்து, பாகவதர்களுக்கு தந்து, பிறகு தாமும்

உண்டுவிட்டு காட்டை நோக்கிச் சென்று விலங்குகளின் கூட்டத்திற்கிடையே பாடிக்கொண்டிருப்பது வழக்கமாகி விட்டது தாஸருக்கு. சத்ரபதி சிவாஜி வேட்டையாட வந்தவர் இதைப் பார்த்து இவரை தரிசிக்க விரும்பினார். காணாமல் திரும்பும்போது சில ஓலைகள் கிருஷ்ணா நதியில் மிதந்து வருவது கண்டு, எடுக்கச் செய்தார். அவற்றில் அழகிய கருத்துக்கள் அமைந்த கவிதைகள் ராமதாஸரால் எழுதப்பட்டு இருந்ததைக் கண்டார். ஒருநாள் சிவாஜி அந்த காட்டில் சென்றபோது மாருதி தாஸருக்கு முன்பு நிற்பதைக் கண்டார். மறு விநாடி மாருதி அங்கே இல்லை. சிவாஜி அருகே சென்று ராமதாஸரது திருவடிகளிலே வீழ்ந்து தனக்கு மெய்ஞ்ஞான அருள் செய்ய வேண்டினார்.

பிறகு முறைப்படி சிவாஜிக்கு உபதேசம் செய்தார் ராமதாஸர். நகரத்துக்கு சென்று ராமநாமத்தையும், தெய்வபக்தியையும் சிவாஜி பிரசாரம் செய்து மக்களை நல்வழிப்படுத்தச் சொன்னார். நாட்டிலேயே ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது ராம்ராம் என்று சொல்லிய பிறகே பேசத்தொடங்க வேண்டும் என்பதையும் வற்புறுத்த வேண்டினார்.

பிறகு நாவிதன் தத்தாத்ரேயனை தன் சீடனாக ஏற்றுக் கொண்டார். இருவரும் சதாசதாரா நகர் போகும் வழியில் சீடனுக்கு பசியெடுக்கவே அருகில் இருந்த சோளக்கொல்லையிலிருந்து அவன் மூன்று கதிர்களை பறித்துவிட்டான். சொந்தக்காரன் அவனை தடிகொண்டு அடித்ததோடு தாஸரையும் நன்கு புடைத்துவிட்டான். கதறிய தத்தனை இதனை ஒருவரிடமும் வெளியிட வேண்டாம் என்று எச்சரித்தார் ராமதாஸர். சிவாஜி ராமதாஸர் வருகை தெரிந்து குருநாதரை வரவேற்று உணவளித்தபோது தாஸரது முதுகு தழும்புகளைக் கண்டு விசாரிக்க, தத்தன் பதிலே சொல்லவில்லை. சோளக்கொல்லை சொந்தக்காரனை சிவாஜி சிறையிலடைத்தார். உடனே தாமே சிறைக்குச் சென்று அவனை விடுதலை செய்து நற்போதனை செய்தார்.

ஒருநாள் ராமதாஸர் காட்டிலே பழங்களைக் கல்லால் அடிக்க எறிந்தபோது, தவறி ஒரு பறவையின் மீதுபட்டு, அது கீழே விழுந்து இறந்தது. அந்தணர்கள் ராமதாஸரை பறவைகளைக் கொல்லும் கயவர் என்றனர். தாஸர் நெறி தவறியமைக்கு மன்னிப்பு கோரி, அந்தணர்களை அந்த பறவையை எழுப்பித்தரவேண்டும் என்றார். அதற்கு இது ராமனாலும் ஆகாது எனவே, தாஸர் ஸ்ரீராமத்ரையோதஸாக்ஷரத்தை உச்சரித்து, பறவை உடலை வானத்திலே விட்டெறிந்தார். பறவை கீச்சிட்டு பறந்து சென்றது. அந்தணர்கள் வியந்தனர்.

பின் காட்டிலே உட்கார்ந்திருந்து தியானம் செய்தபோது துக்காராம் ஸ்வாமிகளின் பாடல்களைப் பாடிச் செல்லும் ஒரு கோஷ்டி அவர் முன்னே நின்று, பண்டரீபுரத்திற்கு வரவேண்டியது தாஸரோ, ராமனைத் தவிர என்னிடத்தில் வேறுயாருக்கும் இடமில்லை என்றார். பிறகு வேறொரு மாய அந்தணராக இறைவன் வந்து வற்புறுத்தி பண்டரீபுரம் அழைத்துச் சென்றான். பண்டரீநாதன் பக்தர்களின் தகுதிக்கு ஏற்பத்தானே தானே தரிசனம் தந்து அளவளாவுவது கண்டு மெய்மறந்தார். பக்தி

வெள்ளப்பெருக்கு இவரையும் ஆட்கொண்டது. சீதாலக்ஷ்மண ஸமேதரராய் காட்சிதரவேண்டினார் ராமதாஸர். பண்டரீநாதர் ஒரு நொடிப்பொழுது ஸ்ரீஸீதாலக்ஷ்மண ஹநுமத் ஸமதராக காட்சி தந்தார் பக்தர்கள் கூட்டம் ஹரிஹரிஹரி, விட்டல விட்டல என்று கோஷித்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் மீண்டும் பாண்டுரங்கன் ஆனான் இறைவன்.

பக்தர்கள் தாஸருக்கு வணங்கி அவரை சந்திரபாகா நதிக்கு அழைத்துச்சென்று நாமதேவர் இறைவன் மகிமையைப் பற்றி சொற்பொழிவு செய்து முடித்தபின் தாஸரை ராமநாம பஜனை மஹிமை பற்றிப்பேச கேட்டுக் கொண்டனர். ராமதாஸர் அற்புதமான ராமநாமத்தையும், மக்கள் வாழும் வழிகளையும் விளக்கி, கவி இசைமாரி பொழிந்தார். இரவில் மூடிய கதவுகளைத் தொட அவை தாமாக திறந்து கொள்ளவே, பாண்டுரங்கனை இரு கைகளாலும் ஆர தழுவி துதித்து விடைபெற்றார் தாஸர்.

ஔரங்கசீப் தக்ஷிணத்தின் மீது படையெடுத்து வந்து கொண்டிருந்தான். மாவுலிவனம் வருமுன்பே தாஸர் அவர்களை வழிமடக்கி, அவரது வில் வித்தையைப் பழித்து தாம் அம்பை எய்தும், எய்த அம்பைப்பிடித்தும் மரத்தில் ஒவ்வொரு சிலையையும் துளைத்துக் காட்ட அவற்றைக் கண்டு நடுங்கி ஔரங்கசீப்பின் வீரர்கள், படையெடுப்பை நிறுத்தி ஓட்டம் பிடித்தனர்.

சிவாஜி ராமதாஸரை நாட்டிற்கு அரசராக்க நினைத்து வழிபட்டு வணங்கினார். அந்த சமயத்தில் ராமதாஸர் ஒரு அரசியல் நூலை எழுதி சிவாஜியிடம் அளித்தார். அந்த நூலின் பெயர் தாஸபோதம். இந்த அற்புத நூல் இரண்டே நாளில் உருவானது. அவை ராஜநீதியை மிகத்தெளிவாக போதிப்பவை. அதை பாராயணம் செய்யச்செய்ய சிவாஜிக்கு பல விஷயங்கள் தெளிவாயின. இதனால் அவரது அரசாட்சி மேலும் செழிப்புறலாயிற்று.

பிறகு ராமதாஸர் ஆலந்தீயிலுள்ள ஞானதேவரது சமாதியை தரிசித்து, ஏகநாதரது திருப்பாத நிலையையும் புதுப்பித்து மேலும் பலருக்கு உபதேசம் செய்தார். 'சம்பல்கட்' ஆலயத்தில் ராமபிரானது விக்ரகங்களை பிரதிஷ்டை செய்வித்து, பதினோரு தலங்களில் மாருதிக்கு மிகப்பெரிய ஆலயங்கள் அமைத்து வழிபாடு செய்யவும் ஏற்பாடு செய்தார் ராமதாஸர். பூனாவில் உள்ள சோனிமாருதி என்னும் தங்கமாருதி, பிகாரிமாருதி, சோர் அதாவது திருட்டு மாருதி என்னும் மாருதி ஆலயங்கள் ராமதாஸரின் முயற்சியால் எழுந்த விசேஷமானவை.

மாவுலி நகரத்தில் இவரது சீடர் உத்தவர் இராமநாமத்தைப் பாடி பிரசாரம் செய்து வந்தார். அங்கே சென்ற ஔரங்கசீப் உத்தவருடன் பேச, இவர் நாமமகிமையைப் பற்றி பேசவே அவன் கோபம் பொங்கி எழுந்து கொடுமைப் படுத்தி இஸ்லாம் மதத்தில் சேர வற்புறுத்தினான். சீடர் அலற, தாஸர் அறிந்து மாருதி ரூபமாய் ஔரங்கசீப் முன் நின்றார். சின்னஞ்சிறு மாருதி மெல்ல மெல்ல விஸ்வரூப மெடுக்க அவன் நடுநடுங்கி தாஸரது திருவடிகளில் வீழ்ந்தான். கோவில்களை

இடிப்பதில்லை. பிற மதத்தாரை வற்புறுத்துவதில்லை என்று அரசன் வாக்களித்த பிறகு மறைந்தார்.

பின்பு பானிகட் எனும் ஊரில் ராமதாஸரும் புக்காராமும் சந்தித்தனர். அவர்கள் முன்னிலையில் சிவாஜி காலில் சதங்கைகள் ஒலிக்க கையிலே சிப்ளாகளாலும் நல்லவர்களாலும் நிறைந்து, எப்பொழுதும் இறைவனது புகழையே பரப்பி வந்ததனால் நாளடைவில் அந்த இடம் சஜ்ஜன்கட் என்று பெயர் பெற்றது. சஜ்ஜன்கட் மலையிலே பராசக்தி மீதும் சில கவிகள் ராமஜாஸர் பாடினார். தாஸர் சஜ்ஜன்கட்டிலே ராமநாமம் கூறியவாரே ராமனது திருவடி நிழலை அடைந்தார்.

ஏகநாதர்

மஹாமுனிவரும் ஞானியுமான பானுஜாஸரின் பேரன் ஏகநாதர். தந்தை சூரிய நாராயணன் கல்வி கேள்விகளில் ஏகநாதரை வல்லவராக்கி பைடனிபுரத்து ஜனார்த்தன பண்டிதரிடம் குரு உபதேசம் பெறச் செய்தார். இறைவனை அடையும் வரை உறுதியாக இருக்கச் சொல்லி ராமதாரக மந்திரத்தை ஜனார்த்தன பண்டிதர் உபதேசித்தார்.

தத்தாத்ரேய குரு காட்சி தந்து ஏகநாதருக்கு ப்ரஹ்மஜானத்தை உபதேசம் செய்தார். நாட்டிலே பக்தி மேலோங்க வால்மீகி ராமாயணம், ஸ்ரீமத்பாகவதம் ஆகிய இதிகாசங்கள் மராத்தி மொழியிலே எழுதி மக்களிடம் பரவச்செய் என்று வற்புறுத்தி மறைந்து போனார்.

இந்த சமயத்தில் பெற்றோர் மறைந்தனர். அந்த விசன நாட்களுக்குப் பிறகு தத்தாத்ரேயர் கனவில் தோன்றி ராமாயணம் எழுதத் தூண்டினர். பரம்பறை பக்தி, கல்வியறிவு, தத்தருடைய உபதேசம் எல்லாம் ஒன்று சேர்ந்து மஹாராஷ்டிர பாஷையிலே ராமாயணம் உருவாக உதவியது.

அண்டை வீட்டு அந்தணன் இவரது வடமொழி பயிற்சியின்மையை சுட்டிக் காட்டி ராமாயணம் படிக்க தகுதியற்றவர் ஏகநாதர் என்று பிரசாரம் செய்தார். சுந்தர காண்டத்தில் அனுமன் திறமையை விவரித்த ஏகநாதர், தாமே அனுமன் என்று எண்ணி விஸ்வரூபமாக எழும்பத் தொடங்க, அதை அறிந்த அண்டை வீட்டான் கர்வம் குலைந்து மன்னிப்பு கேட்டான். ராமாயணம் பாடிமுடிந்து அரங்கேற்றமும் நடந்தது. தினந்தோறும் ஏகநாதர் ராமாயண சொற்பொழிவுகளும் செய்யத் தொடங்கினர். பண்டரிநாதன் இந்த ராமசரிதத்தை மானிட வடிவம் தாங்கி கேட்க வேண்டும் என்று விருப்பம் கொண்டான். ஏகநாதரிடம் கண்டியா கிருஷ்ணன் என்ற பெயருடன் பணியாளாக இருந்து இவரது கவிதைகளைக் கேட்க இவரது வீட்டிற்குச் சென்று வேலையில் அமர்ந்தான்.

கண்டியா கிருஷ்ணன் ஓடி ஓடி வேலைகள் செய்தான். ராமாயணம் தொடங்கும் போது தூபதீப நிவேதனங்களை எடுத்து வைத்து, ஏகநாதருக்கு விசிறி எடுத்து வீசவும் தொடங்கி விடுவான். உருகி உருகிப் பாடுவார் ஏகநாதர். அகமும் புறமும் மலர புன்னகை செய்து மகிழ்வான் இறைவன், சிறந்த ரஸிகன் போல. ஏகநாதரது தந்தையாருக்கு

சிரார்த்தம் வந்தது. அந்தணர்களை இரு நாட்கள் முன்பே நிச்சயித்து ஏற்பாடுகளையும் செய்திருந்தான் கண்டியா கிருஷ்ணன்.

வீடு மெழுகி தண்ணீர் நிரப்பி சமையல் செய்ய புகுந்திருந்தான் அவன் சமையலறையிலிருந்து நெய், ஏலம், வெல்லம் இவைகளின் நறுமணம் வீசவே பின்புறத்தில் வசித்த பஞ்சமர் ஜாஜியினளான தோட்டக்காரன் மனைவி உண்ண வேண்டும் என ஆவல் கொண்டு, சாப்பாடு தனக்கு கிடைக்குமா என்று கேட்டான். இந்த சொற்கள் ஏகநாஜர் காதில் விழவே, சேரி மக்கள் இத்தகைய உணவை எப்பொழுது உண்ணப் போகிறார்கள் என்று எண்ணியவாறு இதை ஏழை மக்களுக்கு போட்டுவிட்டு, புதிதாய் செய்து தந்தையை ஆராதிக்க சொன்னார். மீண்டும் பாத்திரங்களை தேய்த்து புண்ணியா வசனமும் செய்து சமையலைத் தொடங்கிச் செய்து கொண்டிருந்தான் கண்டியா கிருஷ்ணன்.

திண்ணையிலே கூடியிருந்த அந்தணர்கள் தோட்டத்தில் நடந்த சம்பவம் தெரிந்து சீறி எழுந்தனர். உள்ளே வர மறுத்து விட்டனர். ஏகநாதர் கவலையோடு உள்ளே வந்தார். கண்டியா, 'மஹா விஷ்ணு, விஸ்வேஸ்வரர், பித்ரு மூவரையும் உரிய இலைகளில் அமர்வதற்கு மெய்யன்போடு வழிபடுங்கள். தாமே வருவார்கள். அடியேனும் என்னுடன் வேலை செய்பவர்களும் அமர்ந்து விடுகிறோம் என்றான். அரைமனதுடன் கண்மூடி தியானத்தில் ஏகநாதர் அமர்ந்தார். ஒரு நாழிகையில் கூடத்தில் திருமால் வந்திறங்கினார். அடுத்து சிவபெருமான் வந்து தோன்றினார். ஏகநாதரது தந்தையே நிழல் உருவாக வந்து இலையில் அமர்ந்தார். வேத மந்திரங்கள் ஒலிக்க, ஹோம நெய் மணம் வீசவே வீதியில் இருந்தவர்கள் ஆச்சரியப் பட்டனர். ஜன்னல் வழியே எட்டிப்பார்த்தவர்களுக்கு மகாவிஷ்ணு, சிவன் அமர்ந்து உண்பது தெரிந்தது. கண்டியாவே விழுந்து விழுந்து உபசரித்து பரிமாறுகிறான். உள்ளே வர மறுத்த அந்தணர்கள் கோயில் சென்று இறைவனிடம் மன்னிப்புக் கோர விரைந்தனர்.

ஏகநாதர் வீட்டில் கண்டியா கிருஷ்ணனும் மற்ற சமையல் செய்பவர்களுமே விருந்தினர்களாக உண்ண சடங்குகள் பூர்த்தியாயின. அந்தணர்கள் ஒரு பிராயசித்தம் செய்யும் படிச் சொல்லி பிறகு ஏகநாதரை ஏற்றுக் கொள்வது என முடிவுக்கு வந்தனர். இதை ஏகநாதர் ஏற்றுக் கொண்டு கங்கா நதியை அடைந்தார். அச்சமயம் குஷ்டநோய் பிடித்த ஒரு முதிய அந்தணர், விஷ்ணு பக்தர் ஏகநாதரைத் தேடி பித்ருதினத்தில் பஞ்சமருக்கு அன்னமளித்த பலனை தத்தம் செய்ய வேண்டி வந்தார். உடனே ஏகநாதர், தங்களது நோய் தீருமானால் அந்தப் பலனை மந்திரபூர்வமாகத் தந்தேன் என்று கூறி அவர் கைகளிலே கங்காஜலத்தை வார்த்தார். அந்த அந்தணரது தொழுநோய் மறைந்தது. பிராயச்சித்தம் செய்விக்க வந்த அந்தணர் கூட்டம் வெட்கி நின்றது.

பண்டரீபுரத்திலே பன்னிரண்டு ஆண்டுகளாக உற்சவம் நடைபெறவில்லை. ஓர் அந்தணர் இறைவனை பார்த்தே தீருவது என்ற வைராக்கியத்துடன் தவம் செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் ருக்குமாயி அந்த அந்தணன் முன் தோன்றி பகவாழ் ஏகநாதர் வீட்டில்

கண்டியா கிருஷ்ணனாக பணியாள் வேலை செய்கிறாராம். நீர் சென்று கைப்பிடியாய் அழைத்து வாரும் என்றனர். திகைத்த அந்தணர் உடனே பைடனிபுரம் சென்று ஏகநாதர் வீட்டையடைந்து கண்டியா பற்றி விசாரித்தார். நீர் நிறைந்த காவடியை தோளிலே தூக்கி உள்ளே நுழைந்தான் கண்டியா. அந்தணர் அவன் கால்களிலே விழுந்து புலம்பினார். ஒன்று மறியாதவன் போல பூஜை அறையில் நுழைந்து மறைந்து போனான் இறைவன் அந்தணர் மூர்ச்சித்தார்.

மூர்ச்சை தெளிந்து எழுந்த அந்தணர், பாண்டுரங்கன் 12 வருஷங்கள் உங்களுக்கே கண்டியாராக பணி செய்தான் என்று உண்மையைச் சொன்னார். நீயே வந்தும் அறியாமல் போனேனே என்று ஏகநாதர் உள்ளம் துடிதுடித்தது. முறைப்படி ராமாயண பாகவத தைங்கர்யங்களும் நடந்து வந்தன. ஒரு நாள் கனவிலே ஞானேஸ்வரர் வந்து ஆலந்திக்கு வந்து எனது சமாதியருகேயுள்ள அசுவத்த விருட்சத்தை வேறிடத்தில் பிரதிஷ்டை செய் என்று பணிந்தார். உடனே அங்கு சென்று அவர் விரும்பிய படியே அசுவத்த பிரதிஷ்டை செய்து சமாதியையும் நல்ல முறையிலே புதுப்பித்து கட்டத் தொடங்கினார். ஊருக்கு வெளியே வெகு தூரத்தில் இருந்த அந்த சமாதியிலே வேலை செய்யும் பணியாட்களுக்கு ஒரு வர்த்தகர், உணவும் குடிநீரும் அளிக்க முன்வந்தார். வேலை முடிந்து ஊருக்கு புறப்படும் சமயம் நானும் பைடனிபுரம் தாண்டியே செல்ல வேண்டும். அங்கேயே பணம் பெற்றுக் கொள்வதாக கூறி உடன் வந்த வர்த்தகர் மாயமாய் மறைந்து போனார். இதுவும் பண்டரீநாதன் திருவிளையாடல், என்று கண்ணீர் மல்க கதறினார் ஏகநாதர்.

இன்னும் ஏகநாதர் பாடல்களை பண்டரீபுரத்தில் பாடுவது என்ற வழக்கம் இருந்து வருகிறது. ஏகநாதர் பாகவதத்தை ஹரிபாட் என்றும் குறிப்பர்.

ஸ்தல் புராணம்

குஸ்மேச்வர் - த்ருஷ்ணேச்வர்

ஹைதராபாத் - காசி கூடா - மன்மாட் ரயில் பாதையில் எல்லோரா குகை அருகே பேரூல் கிராமம் (ஔரங்காபாத்திலிருந்து 28 கி.மீட்டர்) அதில் இந்தக் கோவில் உள்ளது.

ஸுதர்மா என்பவரின் இரண்டாம் மனைவி குச்மா. இவள் தினமும் மண்ணில் 108 லிங்கம் அமைத்து வழிபட்டு அருகிலுள்ள குளத்தில் விடுவாள். (பார்த்திவ லிங்க பூஜை) மூத்தவள் ஸுரேகாவிற்கு புத்திர பாக்யமில்லை. குச்மாவிற்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது. சிறுவனிடம் வந்த அசூயையில் அதனை மூத்தவள், இளையவள் வீட்டில் இல்லாதபோது கொன்று குளத்தில் எறிந்தாள். இளையவள் அப்போது லிங்க பூஜை செய்து லிங்கங்களை குளத்திலிட்டுத் திரும்பும்போது இறந்த குழந்தை உயிர்பெற்று குளத்தின் கரையில் ஏறியது. சிவன் அவளது பூஜையில் திருப்தி அடைந்து ஜோதி வடிவில் எப்போதும் குளக்கரையில் தோன்றுவதாக வரமளித்தார்.

எல்லோரா குகையிலுள்ள கைலாஸ மந்திர் தான் குஸ்மேச்வரர் என்பது முண்டு. தேவகிரி அருகிலுள்ள கோட்டையிலுள்ள ஸஹஸ்ர லிங்க பாதாளேச்வரர், ஸூர்யேச்வரர் என்ற கோயில்களும், ஸூரிய குண்டம்.

பீமா சங்கரம் - பீமா சங்கரர்

நாஸிக் - புனா வழியே செல்லலாம். பீமா நதி உற்பத்தியாகுமிடத்தின் அருகே குன்றின் மேல் தேவியின் கோவிலும், அடிவாரத்தில் பீமாசங்கரர் கோவிலும் உள்ளன.

திரிபுராஸுரனை அழித்த பகவான் இங்கு ஓய்வு எடுக்கத்தங்கினார். பீமகன் என்ற அரசன் தவம் செய்து அவர் அங்கு எப்போதும் இருக்க வேண்டினார். பகவான் ஜோதி வடிவில் கோயில் கொண்டுள்ளார். சிவராத்திரியின் போது மட்டுமே அதிகமாக மக்கள் கூடுவர். டாகினி என்ற புண்யக்ஷேத்திரமாக இது இருந்ததென்பர். இந்த லிங்கத்திலிருந்து நீர் பெருகிக் கொண்டிருக்கும்.

அஸாமில் காமரூபமாவட்டத்தில் கௌஹாதி அருகே பிரும்மபுரம் என்ற குன்றில் பீமசங்கரர் உள்ளார் என்றும் வரலாறு உண்டு. காமரூபேச்வரன் என்ற சிவபக்தனான அரசன் தவத்தில் இருந்தபோது பீமன் என்ற ராட்சதன் பயமுறுத்த, சிவபெருமான் தோன்றி அவனை அழித்தான். அரசனின் வேண்டுகோளுக்கு இணங்க அங்கேயே ஜயோதிர் லிங்கமாகத் தங்கினார்.

நைனிதாலுக்கு அருகே உஜ்ஜனக் என்ற இடத்தில் பீமசங்கரர் கோயில் கொண்டுள்ளதாகவும் கூறுவர்.

புர்லீ பைஜ்நாத் - பரலி வைத்தியநாதர்

1. பர்பாணிக்கு அருகே புர்லி பைஜ்நாத் என்ற ஸ்டேஷன் - ஒரு கிலோ மீட்டரில் கோவில். வைத்யநாதர் என்ற ஜயோதிர்லிங்கம். புர்லி கிராமத்தில் உள்ளது. சிறுமலையின் மீது கோவில். அதன் அடிவாரத்தில் ஒரு சிற்றாறு ஓடுகிறது.

2. வங்க தேசத்தில் ஜஸீடீஹ் என்ற ஸ்டேஷன் அருகே 5 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளதென்பர். இது முன்னர் மயானபூமியாயிருந்ததாம். ஸதீ தேவியின் இதயம் இங்கே விழுந்ததால் இது ஒரு சக்தி பீடம். ராவணன் தன் பத்து தலைகளையும் ஹோமம் செய்து சிவனை மகிழ்வித்த இடம் என்பர். ராவணனது தவத்தில் மகிழ்ந்த சிவன் தன் ஜோதி வடிவான லிங்கத்தை ராவணனுக்கு அளித்து, தூய்மையின்மை சிறிதும் ஏற்படாதபடி காக்கவும், தரையில் வைக்காதிருக்கவும் கட்டுப்பாடு விதித்தார். ராவணனுக்கு சிறுநீர் வெளியாக்க இதனைத் தரையில் வைத்து அப்பால் சென்றான். பிறகு அதனை அகற்ற முயன்று தோன்றான். (விபீஷணன் ஸ்ரீ ரங்கநாதரைப்போல) காலடியில் நீர் கொணர்ந்து அபிஷேகம் செய்வது விசேஷம்.

த்ரியம்பகேச்வரர்

நாஸிக் அருகே 27 கி.மீ. மலையடிவாரத்தில் கௌதம மகரிஷி தவம் செய்த இடம். அவர் தம் தவத்தின் பயனாக கோதாவரி நதியை சிவபெருமான் இங்கு தோற்றுவித்தார்.

முதலில் பிரும்மகிரியில் வெளிப்பட்ட நதி மறைந்து கங்கா த்வாரத்தினருகே வெளிப்பட்டு மறைந்து சொட்டு சொட்டாகக் கசிந்து திரியம்பாத்தினருகே உள்ள காட்டில் சக்ரதீர்த்தத்தில் தாரையாக வெளிப்படுகிறாள். திரியம்பகத்தின் அருகே உள் குசாலர்தம் என்ற நீர் அருவியினடியில் கோதாவரி வெளிப்படுகிறாள். ஆனால் மொண்டெடுத்து நீராடுவர். குசாலர்த்தத்தை வலம் வருவது முண்டு. குசாவர்தம் - த்ரியம்பகம் இடையே நீல கங்கா ஸங்கமத்தில் ஸங்கமேச்வரர், கனகேச்வரர், கபோதேச்வரர், த்ரி ஸந்த்யாதேவி, கங்கா, ஸ்ரீலக்ஷ்மீநாராயணர், ஸ்ரீராமர், பரசுராமர், த்ரிஸந்த்யேச்வரர், காஞ்சநேச்வரர், ஜ்வ ரேச்வரர், வரகௌதமேச்வரர், வல்லாலேச்வரர் முதலிய பல சிறு கோவில்களும் உள்ளன.

த்ரியம்பகேச்வரர் - இவர் ஆலயத்தினுள் ஸித்திவிநாயகர், நந்திகேசுவரர் இவரிருவரையும் வணங்கி உள்ளே செல்கிறோம். த்ரியம்பகரின் மேல் பாதி மட்டும் தெரியும். மும்மூர்த்திகளின்மூன்று தலைகளையும் காணலாம். பூஜை அபிஷேகம் முடிந்ததும் வெள்ளியால் பஞ்சமுகக் கவசம் சாற்றிவிடுவர். திங்களன்று தங்கத்தாலான கவசம் சார்த்துவர். கோவிலை வலம் வரும்போது அம்ருத குண்டம் என்ற கிணற்றைக் காணலாம்.

அருகில் ஞானேசுவரரின் குருவும் அண்ணாவுமான நிவ்ருத்தி நாதரின் ஸமாதி உள்ளது. கங்காத்வரம் போகும் வழியில் இது உள்ளது. வர்காரி என்ற சம்பிரதாயத்தைச் சார்ந்தவர்களுக்கு இது முக்கிய வழிபாட்டிடம். கங்கா ஸாகரம், இந்திரதீர்த்தம், கனகல், பில்வதீர்த்தம், பிரயரம், அஹல்யா ஸங்கமம், கௌதமாலயம் முதலிய புண்ய தீர்த்தங்கள் உள்ளன.

த்ரியம்பகேச்வரத்தின் அருகே பிரும்மகிரி, நீலகிரி, கங்காத்வாரம் என்ற சிறு குன்றுகள் உள்ளன. பிரும்மகிரியில் சிவபெருமானின் சடை மலையில் பதிந்துள்ள காட்சியும், ஸத்யோஜாதம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், ஈசானம் என்ற ஐந்து சிகரங்களும் சிவபெருமானே மலையுருவிலிருப்பதை உணர்த்தும். நீலகிரியில் பரசுராமரின் தாய் ரேணுகா தேவி நீலாம்பிகை என்ற பெயரில் கோயில் கொண்டுள்ளாள். கங்காத்வாரத்தை தௌலகிரி என்றும் கூறுவர். கோதவரி தேவியின் கோயில் இங்கு உள்ளது. கோதவரியை கங்கை என்றே கூறுவர். கௌலாம்பிகை என்ற தேவி கௌலமார்க்கத்தில் வழிபடும் அம்பிகை, இங்கு கோயில் கொண்டு உள்ளாள். கோரக்க நாதர் என்ற மகான் தவம் செய்த இடம் இது. சக்ரதீர்த்தம் த்ரியம்பகத்திலிருந்து 10 கிலோ மீட்டரில் உள்ளது. இங்கு ஒரு குகையிலிருந்து வெளிப்படுகிற கோதாவரி நாஸிக்கில் நுழைகிறாள்.

- அளவுக்கதிகமாய், தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள். (Over Expectation)
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.
- அற்ப விஷயங்களையும் பெரிதுபடுத்தாதீர்கள்.
- உங்கள் கருத்துக்களில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் **(Flexibility)**
- மற்றவர் கருத்துக்களை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள். **(Misunderstanding)**
- மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும், இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள். **(Courtesy)**
- புன்முறுவல் காட்டவும், சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமில்லாதது போல நடந்து கொள்ளாதீர்கள்.
- பேச்சிலும், நடத்தையிலும் திமிர்தனத்தையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும், பண்பாட்டையும் காட்டுங்கள்.
- அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து அளவளாவுங்கள். **(Frankness)**
- பிணக்கு ஏற்படும்போது, அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன்வாருங்கள். **(Initiative)**
- தேவையான இடங்களில் நன்றியையும், பாராட்டையும் சொல்ல மறக்காதீர்கள். பாராட்டுக்கு மயங்காத மனிதனே இல்லை. அதுவே உங்களுக்கு வெற்றியாக அமையும்.

ஆன்மீக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்!

சைவத் திருமறைகள் பன்னிரண்டில் பத்தாம் திருமறையாகத் திகழ்வது திருமந்திரம் திருமூலர் தன் தவத்தின் பயனால் மூவாயிரம் செய்யுட்களாக அருளியுள்ளார். ஞான மார்க்கத்திற்கு பதஞ்சலியின் சூத்திரம் முக்கியமான பங்கு வகிப்பதைப்போல் திருமந்திரமும் அடிப்படையாக அமைந்துள்ளது. இச்செய்யுட்களுக்கு தத்துவக் காட்சியர் வீர. உலகநாதன் அவர்கள் தமது ஆத்ம அனுபவத்தின் மூலம் மெய்யுரை எழுதியுள்ளார்கள். இந்நூல்களை எங்களது ஆன்மீக நூல் வெளியீட்டுக்குழு அச்சிட்டு வெளியிடுகிறது. யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதைப் போல் அன்பர்கள் அனைவரும் படித்து பயன் பெருவீர்களாக.

நூல்கள் கிடைக்குமிடம்

திருமதி. **கோமதி உலகநாதன்**
DD4, ஹவுஸிங் யூனிட், சாலை ரோடு,
திருச்சி - 620 003. PH : 766551 pp

திரு. **K.நல்லதம்பி**
57, பர்மா பஜார், தெப்பக்குளம்,
திருச்சி - 620 002. PH : 712355

சினிபிரியா, திருச்சி-2. ✆ 70194C